# குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற விதிமுறைகளும் வழிகாட்டு நெறிமுறைகளும்



## அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

வான்முகில்
திருநெல்வேலி

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் குழந்தைகளுக்கான

# உறுதிமொழி

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினராகிய நான்,

- இந்திய அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் சமத்துவம், சமூக நீதி, சமதர்மம், சனநாயகம், சமய சார்பின்மை, பன்மைத்துவம் போன்ற உன்னத மதிப்பீடுகளை உயிர் மூச்சாக மதிப்பேன்.
- சாதி, சமயம், இனம், நிறம், பாலினம், பிறப்பிடம், தகுநிலை போன்ற எவற்றின் அடிப்படையிலும் யாரிடமும் ஒருபோதும் பாகுபாடு காட்டமாட்டேன்.
- ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அனைவரோடும் சமமாகப் பழகுவேன்.
- எவ்வகையான சுரண்டலையும், ஆதிக்கத்தையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.
- எந்தச் சூழ்நிலையிலும் வன்முறையில் ஈடுபடமாட்டேன்.
- அரசமைப்பு உறுதிப்படுத்தும் தனிமனித உரிமைகள் உள்ளிட்ட பிற அடிப்படை மனித உரிமைகளை மதித்து நடப்பேன்.
- அரசமைப்பின்படி குடிமக்களுக்கு உள்ள அனைத்து கடமைகளையும் என்னளவில் உளப்பூர்வமாக நிறைவேற்றுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

அரசமைப்பு உரிமைக் கல்வித்திட்டம்

Constitutional Rights Education Programme (CRE)

# மன்ற விதிமுறைகளும் வழிகாட்டு நெறிமுறைகளும்

## கையேடு




**வான்முகில்**

**தலைப்பு**
மன்ற விதிமுறைகளும்
வழிகாட்டு நெறிமுறைகளும் - கையேடு

**ஆக்கமும் ஒருங்கிணைப்பும்**
முனைவர். இ. தேவசகாயம்
ம. பிரிட்டோ
கா. கணேசன்

**மன்ற விதிமுறைகள் உருவாக்கம்**
முனைவர். லெ. பெர்னாட்

**உதவி**
ச. மோகன்
க. பிரியா

**பதிப்பு**
டிசம்பர், 2021

---

வெளியீடு :
**வான்முகில்**
15, கவிதா நகர், மகாராசநகர் அஞ்சல்,
திருநெல்வேலி - 627011.
தொடர்புக்கு : 94426 18117, 99943 68503

## உள்ளடக்கம்


1. அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் இலக்கும் கொள்கையும் 1

2. மன்றத்தின் அமைப்பு 4

3. மன்றக் கூட்டங்கள் 8

4. துணைக் குழுக்களுக்கான செயல்பாடுகள் 10

5. பிற்சேர்க்கை

அ) குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் – ஓர் அறிமுகம் 17

ஆ) அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் குழந்தைகள் – ஒரு பார்வை 21

இ) அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் பெயர்ப் பட்டியல் தமிழ்நாடு – புதுச்சேரி 26

ஈ) மன்றங்களின் தொடக்க விழாவிற்கான வழிகாட்டுதல்கள் 31

உ) மாவட்டத் தொடக்க விழாவிற்கான வழிகாட்டுதல்கள் 34

ஊ) தமிழக அளவிலான தொடக்க விழாவில் மாண்புமிகு சா. பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் சிறப்புரை 37

எ) தமிழக அளவிலான தொடக்க விழாவில் முனைவர் வே. வசந்தி தேவி அவர்களின் சிறப்புரை 42

ஏ) அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் இயங்கும் மாவட்டங்கள் – தோழமை அமைப்புகள் மற்றும் இயக்குநர்கள் விபரம் 47

6. மன்ற நிகழ்வு பதாகைகளும் நிழற்படங்களும் i - xx

# அணிந்துரை

"அரசமைப்பு உரிமைகளை குழந்தைகள் மத்தியில் பண்பாடாக வளர்த்தெடுப்போம்" என்ற முழுக்கத்தோடு எமது வான்முகில் அமைப்பு தமிழகத்தில் அரசமைப்பு உரிமைக்கல்வி மன்றங்களை 17 மாவட்டங்களில் 125 இடங்களில் இந்த ஆண்டு தொடங்கியுள்ளது. வான்முகில் அமைப்பின் ஒருங்கிணைப்பில் 10 குடிமைச் சமூக அமைப்புகளோடு இணைந்து முன்னெடுக்கப்படும் இந்த கூட்டு முயற்சி, இந்தியத் துணைக்கண்டத்திலே எந்த அமைப்பும் மேற்கொள்ளாத ஒரு புதிய வடிவம்! குழந்தைகளை உரிமை பெற்ற குடிமக்களாக வளர்த்தெடுக்கும் நோக்கிலும், சமூக அக்கறையும் பொறுப்பும் கொண்ட ஆளுமைகளாக உருவாக்கும் எண்ணத்திலும், உருவாக்கப்பட்ட முயற்சி இது!

தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும், விடுதிகளிலும், கிராமங்களிலும் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை உருவாக்கி, அனைத்துக் குழந்தைகளையும் ஆக்கப்பூர்வமாக இப்பணியில் ஈடுபடுத்திட வேண்டும் என்பதே எமது இலக்கு. பகைமையும், வெறுப்பும், சகிப்பின்மையும் பெருகி வரும் இன்றைய சூழலில், மானுட நேசிப்பும், சகோதரத்துவ உணர்வும், சமத்துவ சிந்தனைப் போக்கும் மிகவும் அவசியத் தேவைகளாக உள்ளன. சனநாயகச் சூழலை உருவாக்கி அனைவரும் இணக்கத்தோடும், நல்லுறவோடும் வாழவும், உரிமைகள் அனைத்தையும் அனுபவித்து கண்ணியமான வாழ்க்கையை மேற்கொள்ளும் குடிமக்களாக சிறந்து விளங்கவும் இது போன்ற கல்வி பயன்படும்.

இந்திய அரசமைப்பு எண்ணற்ற உரிமைகளை நம் அனைவருக்கும் உத்திரவாதப்படுத்தி இருந்தாலும், நடைமுறைச் சூழலோ நேரெதிராக உள்ளது. வன்முறைகளும், உரிமை மீறல்களும் நின்றபாடில்லை. கொரோனா பெருந்தொற்றுச் சூழல் மேலும் மேலும் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிவிட்டது. ஏழை எளிய மக்கள், அன்றாடங்காய்ச்சிகள், அமைப்பு சாரா தொழிலாளர்கள், தலித்துகள், ஆதிவாசிகள், சிறுவணிகர்கள், மீனவர்கள், சிறுகுறு விவசாயிகள், விளிம்பு நிலை மக்கள் அனைவரும் மிகவும் வறிய நிலைக்குத்

தள்ளப்பட்டுவிட்டனர். அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் சமவாய்ப்பு, சமூகநீதி, சமத்துவம் என்பதெல்லாம் வெற்றுக் காகித முழுக்கங்களாக ஆகிவிட்டதோ என்ற ஐயம் பலருக்குள்ளும் எழுகிறது.

இதுபோன்ற சூழலில் நமது உரிமைகளை மீட்டெடுக்கும் கவசமும் கேடயமுமாக இருக்கவேண்டியது நம் அரசமைப்பு சட்டமே. வசதிபடைத்தவருக்கும், வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றோருக்கான சட்டநூலாக மட்டுமே நமது அரசமைப்பு இருந்துவிடக்கூடாது; நூலகங்களிலும், நீதிமன்றங்களிலும் மட்டுமே வைத்து அழகு பார்க்கப்படும் ஓர் அலங்கார ஆவணமாக சுருங்கிவிடக்கூடாது. வீதிகளுக்கு, வீடுகளுக்கு, விளிம்புநிலை மனிதர்க்கு இதன் சாராம்சத்தை கொண்டு சென்று, அவர்களை அதிகாரப்படுத்தும் ஆவணமாக இதனை மாற்ற வேண்டும். அதை நோக்கிய முதல் படிதான் இந்த அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் உருவாக்கம்.

தமிழக அளவிலான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் தொடக்க விழாவில் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு திரு.சா.பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் சிறப்புரையும், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தரும், எங்கள் அரசமைப்பு உரிமைக்கல்வி திட்டத்தின் மாநில ஆலோசனைக் குழு தலைவருமான மதிப்பிற்குரிய முனைவர் வே.வசந்திதேவி அவர்களின் சிறப்புரையும் பின்னிணைப்புகளாக இதில் இணைக்கப்பட்டுள்ளன. அவர்களது மிகச்சிறப்பான, ஆழமான உரைகள் குழந்தைகளுக்கான இந்த அரசமைப்பு உரிமைக் கல்வியின் அவசியம், தேவை, இன்றையக் காலக்கட்டத்தில் அதன் பொருத்தப்பாடு போன்றவை குறித்துப் பேசுகின்றன. இவ்வுரைகள் குழந்தைகளுக்கும், அவர்களை வழிநடத்தும் நெறியாளர்களுக்கும் மிகவும் பயன்படும் என்று நம்புகிறேன்.

இந்த மன்றங்களின் இலக்கு, திசைவழி, அவற்றின் போக்கு, செயல்பாடுகள், போன்றவற்றைத் திட்டமிட்டு வடிவமைத்திருக்கிறோம். மன்றங்களில் யார் யார் உறுப்பினர்களாக முடியும்? மன்றக்கூட்டங்கள் எப்படி நடைபெற வேண்டும்? இதில் இணைந்துள்ள ஒவ்வொரு பங்குதாரரின் பணியும் பங்கும் என்ன? என்றெல்லாம் இந்த மன்ற விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ளன. மன்றங்கள் இந்த விதிமுறைகளைப் படித்து அதன்படி முறையாகக் கொண்டு

செல்லப்பட்டால் அங்கு நல்ல மாற்றங்கள் நிகழும். நாம் எதிர்பார்க்கும் புதிய சமூகம் விரைவில் அமையும் என்று கருதுகிறோம்.

இதனை உருவாக்குவதில் அதிகநேரம் செலவிட்ட பேரா.இ.தேவசகாயம், முனைவர் லெ.பெர்னாட், திரு.கா.கணேசன், திரு.ச.மோகன் மற்றும் உறுதுணையாக இருந்த திருமிகு. பிரியா ஆகியோருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன். மன்றங்களைத் தங்களது பகுதிகளில் சிறப்பாக கொண்டுசெல்ல உதவும் அனைத்து குடிமைச் சமூக அமைப்புகளின் இயக்குநர்களையும், அவர்களோடு தோள்கொடுத்து உழைக்கும் அனைத்து நெறியாளர்களையும் உளமாரப் பாராட்டுகிறேன். குழந்தைகளோடு குழந்தைகளாக இரவும் பகலும் பயணப்படுகிற இந்த நெறியாளர்கள் எப்போதும் பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் உரியவர்கள்!

**ம. பிரிட்டோ**
இயக்குநர், வான்முகில்

குழந்தைகளுக்கான அரசமைப்பு
உரிமைக் கல்வி மன்றம்

Constitutional Rights Education
Club for Children

# மன்ற
# விதிமுறைகளும்
# வழிகாட்டு
# நெறிமுறைகளும்
## - கையேடு

அத்தியாயம் 1

# அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் இலக்கும் கொள்கையும்

## 1.1. முகப்புரை

“அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்” என்ற இலக்கினை நோக்கிய பயணத்தில், எமது பகுதியைச் சேர்ந்த குழந்தைகளாகிய நாங்கள் எங்களை மனப்பூர்வமாக அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்கிறோம். எம் பகுதியில் “அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தை” தொடங்க உறுதி பூண்டுள்ளோம். இம்மன்றத்தின் மூலம் எம் பள்ளி, குடும்பம், சமூகம் ஆகியவற்றில் அரசமைப்பு உரிமைகளையும், மனித உரிமைகளையும் பாதுகாத்து, வளர்த்தெடுத்து சமூக அமைதியை நிலை நாட்டுவோம் என்று உறுதி கூறுகிறோம். எங்கள் பகுதியில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் அமைக்கவும், மன்ற வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படவும் உறுதியேற்கிறோம். வான்முகில் அமைப்பும், எமது மாவட்ட அமைப்பும் இணைந்து முன்னெடுக்கிற இம்முயற்சிகளில் எங்களை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திக் கொள்வோம் என உறுதியளிக்கிறோம்.

## 1.2. இலக்கு

அரசமைப்பு உரிமைகளை நம் சமூகத்தில் பண்பாடாக வளர்த்தெடுப்போம்.

## 1.3. கொள்கை

1) அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி, சமதர்மம், மனித மாண்பு, சனநாயகம், சமயச்சார்பின்மை போன்ற உயரிய மதிப்பீடுகளை மன்றத்தின் கொள்கையாகப் பேணுதல்.
2) அரசமைப்பு மற்றும் மனித உரிமைகளை வாழ்நெறியாகக் கொண்ட சமூகத்தை உருவாக்கும் கருவிகளாகக் குழந்தைகளை தயார்படுத்துதல்.

## 1.4. நோக்கங்கள்

1) அனைத்துக் குழந்தைகளுக்குமான பாதுகாப்பினை உறுதி செய்தல்.

2) அரசமைப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்த அறிவையும், திறனையும் மேம்படுத்துதல்

3) குழந்தைகளிடம் இயல்பிலேயே காணப்பெறும் மனித உரிமை மதிப்பீடுகளை வெளிக்கொணரல்

4) குழந்தைகளின் மனநிலை, சிந்தனை ஆகியவற்றில் அரசமைப்பு மதிப்பீடுகளின் படி நேர்மறையான மாற்றங்கள் உருவாக முயற்சித்தல்

5) அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் அனைத்துச் செயல்பாடுகளிலும் குழந்தைகளின் பங்கேற்பை சனநாயக வழியில் உறுதி செய்தல்

6) அரசமைப்பு உரிமைத் தூதுவர்களாக குழந்தைகளை உருவாக்குதல்

7) குழந்தைகள், ஆசிரியர்கள், பள்ளிகள், குடும்பங்கள், சமூகத்தில் அரசமைப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்து ஆழமான புரிதலை உருவாக்குதல்

8) குழந்தைப் பருவத்தின் இனிமையை குழந்தைகள் முழுமையாக அனுபவிப்பதை ஊக்குவித்தல்

9) குழந்தை உரிமை மீறல்களால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு ஆதரவாக இருத்தல்

10) குழந்தைத் திருமணம், குழந்தைக் கடத்தல், கருக்கொலை, சிசுக்கொலை, பாலியல் துன்புறுத்தல், கொத்தடிமை உள்ளிட்ட பிரச்சனைகளில் மன்றப் பகுதி சார்ந்த பிரச்சனைகளைக் கண்காணித்துத் தகவல் அளித்தல்

11) குழந்தை உரிமைகள் சார்ந்த பிரச்சனைகளின் போது பள்ளி, அண்டைச் சமூகம், குடிமைச் சமூக அமைப்புகள், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கிடையே ஆக்கப்பூர்வமான தொடர்பை ஏற்படுத்துதல்

12) சாதி, சமய, இன, மொழி, பாலினம், பிறப்பிடம், வர்க்கம், திறன் அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிராக குரல் கொடுத்தல்

13) சமூகத்தில் திருநர், மாற்றுத்திறனாளர் மற்றும் இதர சிறப்புத் தேவையுடையோர்க்கு உகந்த சூழலை உருவாக்க குரல் கொடுத்தல்

14) பள்ளி இடைநின்ற குழந்தைத் தொழிலாளர்கள், இடம் / புலம் பெயர்ந்த / மறுகுடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் குழந்தைகள் ஆகியோரை பள்ளிகளில் சேர்க்க வழிவகை செய்தல்

அத்தியாயம் 2

# மன்றத்தின் அமைப்பு

## 2.1. உறுப்பினராகும் முறை

1) மன்றம் அமையவுள்ள பகுதியில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகள் மன்றத்தில் உறுப்பினராகலாம்.
2) உறுப்பினராக விருப்பம் தெரிவிக்கும் குழந்தைகள் தங்கள் பெயரை பொறுப்பாளரிடம் அளிக்க வேண்டும்.
3) குழந்தைகள் அனைவரும் மன்றச் செயல்பாடுகளில் முழுமையாகப் பங்கேற்பதாக உறுதியளிக்க வேண்டும்.
4) சாதி, சமய, இன, மொழி, பாலினம், பிறப்பிடம், வர்க்கம், திறன் அடிப்படையில் எந்தப் பாகுபாடும் இன்றி அனைத்துக் குழந்தைகளும் மன்ற உறுப்பினராகும் தகுதி உடையவர்.

## 2.2. உறுப்பினர்களின் உரிமைகளும் கடமைகளும்

1) மன்றத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்க உரிமையுண்டு.
2) குழந்தைகள் மீதான உரிமை மீறல்களை அடையாளம் கண்டு மன்ற நெறியாளருக்கு தகவல் தெரிவிக்கவும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவு தரவும், மன்றத்தில் அது குறித்து விவாதிக்கவும் உரிமையுண்டு.
3) உறுப்பினர்கள் அனைவரும் மன்றத்தின் துணைக் குழுக்களில் பங்கேற்க உரிமையுண்டு.
4) மன்றத்தின் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையில் உள்ளவற்றை முழுமையாக கடைப்பிடிப்பது மன்றக் குழந்தைகளின் கடமையாகும்.
5) மன்ற உறுதிமொழியை உளமார ஏற்று அவற்றை பின்பற்றுவது அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும்.

## 2.3. துணைக் குழுக்கள்

துணைக் குழுக்களில், அனைத்துக் குழந்தைகளும் சம அளவில் உறுப்பினர்களாக இருப்பர்.

1. துணைக் குழு : கல்வி & விழிப்புணர்வுக் குழு (Education and Awareness)
2. துணைக் குழு : குழந்தை உரிமைக் கண்காணிப்பு (Child Rights Monitoring)

ஆகிய இரு குழுக்களை உள்ளடக்கியதாகும்.

**இக்குழுக்களின் செயல்பாடுகள்**

1) துணைக் குழுவின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்.
2) துணைக் குழுவின் திறனாய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

## 2.4. மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

1) அனைத்துக் குழந்தைகளும் இணைந்து ஒருமித்த அல்லது தேர்தல் மூலம் ஒரு ஆண், ஒரு பெண் என இருவரைத் தேர்வு செய்வர். இவர்கள் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக இருப்பர்.
2) மன்ற ஒருங்கிணைப்பாளர்களே அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் அன்றாடச் செயல்பாடுகளை அனைவருடனும் இணைந்து, விவாதித்து, முடிவெடுத்து செயல்படுத்துவர்.
3) மாதாந்திர மன்றக் கூட்டத்தை நடத்துவது, அனைத்துக் குழந்தைகளையும் கொண்ட பொதுக் குழுவைக் கூட்டுவது, கூட்டங்களை நடத்துவது, அறிக்கைகளைத் தொகுப்பது, ஆவணப்படுத்துவது, அவற்றைச் சமர்ப்பிப்பது போன்ற பணிகளை ஒருங்கிணைப்பாளர்கள் செய்வர்.

## 2.5. நெறியாளர்

வான்முகில் அமைப்புடன் இணைந்து இத்திட்டத்திற்காகச் செயல்படும் மாவட்ட அமைப்பினால் தெரிவு செய்யப்படும் அனுபவம் வாய்ந்த நபரே மன்றத்தின் நெறியாளராக செயல்படுவார்.

**பணிகள்**

1) அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் தொடங்கத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்
2) மன்றச் செயல்பாடுகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த வழிகாட்டுதல்
3) குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்திற்கும் வான்முகில் அமைப்பிற்கும் தொடர்புப் பாலமாக இருத்தல்
4) குழந்தைகள் மீதான உரிமை மீறல்களை மன்றங்கள் திறமையாக எதிர்கொள்ளத் துணையாக இருத்தல்
5) நெறியாளர் தான் சார்ந்திருக்கும் அமைப்பின் இயக்குனருக்கு அவ்வப்போது தமது பணி சார்ந்த அறிக்கையை சமர்ப்பித்தல். மன்றத்தை சிறப்பாக வழிநடத்துவதற்கு அவரது ஆலோசனைகளைக் கேட்டுப் பெறல்
6) வான்முகில் அமைப்பு நடத்தும் வாராந்திர இணையவழிக் கூட்டத்தில் மன்றத்தின் சார்பாக சிறப்பாக பங்கேற்பு செய்தல், பணி தொடர்பான மாதாந்திர அறிக்கையைச் சமர்ப்பித்தல், தங்கள் பணிக் கிராமங்களில் சிறு சிறு களஆய்வுகளை மேற்கொள்ளல், திட்டம் தொடர்பான கூட்டங்களில் பங்கேற்றல், வான்முகில் ஏற்பாடு செய்யும் பயிற்சிகளில் கலந்து கொள்ளுதல் போன்ற பணிகளை நெறியாளர் மேற்கொள்வர்.

## 2.6. மாவட்ட அமைப்பாளர்

வான்முகில் அமைப்புடன் இணைந்து இம்மன்றங்களை மாவட்ட அளவில் கொண்டு செல்லும் குடிமைச் சமூக அமைப்பின் இயக்குனரே அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் மாவட்ட அமைப்பாளராக இருப்பார்.

**பணிகள்**

1) மாவட்ட அளவில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை தொடங்க மன்றம் சிறப்பாகச் செயல்பட, ஒருங்கிணைக்க, நிகழ்வுகளை முன்னெடுக்க வழிகாட்டுவார்.

2) வான்முகில் அமைப்புடன் கலந்தாய்வு செய்து சரியான மன்ற நெறியாளரை அடையாளம் கண்டு பணியமர்த்துவார்.

3) மாவட்ட அளவில் செயல்படும் அனைத்து அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களையும் நெறியாளர்கள் வாயிலாக ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொள்வார்.

## 2.7. மாநில ஒருங்கிணைப்பாளர்

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை மாநில அளவில் ஒருங்கிணைக்கும் பணியை வான்முகில் அமைப்பின் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் மேற்கொள்வார். மாநில துணை ஒருங்கிணைப்பாளர் உறுதுணையோடு மன்றங்களை வழிநடத்தும் பொறுப்பினை மேற்கொள்வார்.

**பணிகள்**

மன்றங்களை ஏற்படுத்த மாவட்ட அமைப்பாளர்களையும், நெறியாளர்களையும் ஊக்குவித்தல், நெறியாளர்களுக்கு மன்றச் செயல்பாடுகளுக்கான பயிற்சி அளித்தல், தேவையான ஆலோசனை வழங்குதல், சிறப்பு நிகழ்வுகளில் பங்கேற்றல், மன்றச் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் மாவட்ட அமைப்புகளின் இயக்குனர்களுடன் தொடர்பு வைத்தல், மாநில துணை ஒருங்கிணைப்பாளர் உறுதுணையோடு மன்றங்களை வழிநடத்தும் பொறுப்பினை மேற்கொள்வார். மாநில அளவில் ஆவணப்படுத்தும் பணியை மாநில துணை ஒருங்கிணைப்பாளர் மூலம் மேற்கொள்வார்.

அத்தியாயம் 3

# மன்றக் கூட்டங்கள்

## 3.1. அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற அறிமுகக் கூட்டம்

- மாவட்ட அமைப்பின் ஆலோசனையின் படி, நெறியாளர்கள் மன்றங்களை உருவாக்குவர்.
- நெறியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் முறையாக மன்ற அறிமுகக் கூட்டங்களை நடத்துவர்.

## 3.2. சேர்க்கை

- மன்ற சேர்க்கைக்கான படிவங்களை குழந்தைகளிடம் அளித்து, பூர்த்தி செய்து, முறையாகத் தொகுத்தல்.
- இதற்காக வடிவமைக்கப்பட்ட கூகுள் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து, குழந்தைகளின் முழுமையான விவரங்களை சரிபார்த்து வான்முகில் அமைப்பிற்கு இணையவழியில் சமர்பித்தல்.

## 3.3. மன்ற பொதுக் குழு கூட்டம்

ஆண்டிற்கு மூன்று முறை பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும். அரசமைப்பு உரிமைக்கல்வி மன்றத்தில் பதிவு செய்த உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வர். மன்ற அளவில் நடைபெறும் பொதுக் குழுக் கூட்டங்கள் நெறியாளர் மற்றும் மாவட்ட அமைப்பாளர் ஆலோசனையுடன் நடைபெறும்.

## 3.4. கூட்டத்தின் நோக்கம்

1) மன்றத்திற்கான துணைக் குழுக்களை உருவாக்கல்.
2) ஒவ்வொரு துணை குழுவிற்கும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல்.
3) ஒருங்கிணைப்பாளர் இருவரை (ஆண்/பெண்) தேர்ந்தெடுத்தல்.
4) ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் போட்டியிட்டால் வாக்குச்சீட்டு மூலம் தெரிவு செய்ய வேண்டும்.

5) மன்றத் தொடக்க விழாவிற்குச் சிறப்பு அழைப்பாளர்களின் பட்டியலைத் தயார் செய்தல். (உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கல்வித்துறை அலுவலர்கள், காவல்துறையினர், வழக்கறிஞர்கள், அருகிலுள்ள பள்ளியிலிருந்து ஆசிரியர்கள், ஓய்வுப் பெற்ற அதிகாரிகள், இளைஞர் அமைப்பினர், குடிமைச் சமூக அமைப்பினர், தன்னார்வ தொண்டு நிறுவத்தினர், ஊடகத்துறையினர்).

6) அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற பெயர்ப் பலகை தயார் செய்தல்.

### 3.5. மன்றத் தொடக்க விழா

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத் தொடக்க நிகழ்வு அந்தந்த பகுதியில் நடக்க வேண்டும். பகுதியில் இருக்கும் அனைவரும் பங்கேற்கும் வகையில் ஏதாவது விடுமுறை நாளில் உகந்த நேரத்தில் நடத்த வேண்டும். (மன்றத் தொடக்க விழாவிற்கான வழிகாட்டுதல்கள் பிற்சேர்க்கை பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது)

### 3.6. மன்றக் கூட்டங்கள் (பொதுக்குழு உள்ளிட்ட கூட்டங்கள்)

1) ஒருங்கிணைப்பாளர்கள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்கு கூட்டம் நடைபெறும் தேதி, நேரம் பற்றி தெரிவிக்க வேண்டும்.

2) வருகைப் பதிவேட்டில் குழந்தைகளின் வருகையை பதிவு செய்ய வேண்டும்.

3) கூட்டங்கள் அனைத்திலும் அரசமைப்பு முகப்புரை, உறுதிமொழி வாசிப்பு மற்றும் மன்றப் பாடல் பாடப்பட வேண்டும்.

4) கூட்டத் தீர்மானங்கள், அறிக்கை ஆகியவற்றை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நிறைவேற்ற வேண்டும்.

5) சமகால பிரச்சனைகளைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

6) கூட்ட நேரம் 45 நிமிடம் முதல் 1 மணி நேரம் வரை இருக்கலாம்.

7) குழந்தை உரிமை மீறல்களை அடையாளம் கண்டு தங்கள் அளவில் தலையீடு செய்யத் திட்டமிடலாம்.

அத்தியாயம் 4

# துணைக் குழுக்களுக்கான செயல்பாடுகள்

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் துணைக் குழுக்களுக்காக சில செயல்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மன்றமும் தங்கள் சூழலுக்கு ஏற்ப இன்னும் பிற செயல்பாடுகளை இணைத்துக் கொள்ளலாம்.

## 4.1. கல்வி & விழிப்புணர்வுக் குழு

மன்ற உறுப்பினர்களுக்கு அரசமைப்பு உரிமைகள், மனித உரிமைகள் குறித்த அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதோடு கலை வடிவங்கள், ஊடகங்கள் மூலமாக அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் தனது இலக்கை அடைய இத்துணைக் குழு செயல்படும்.

**மாதிரி செயல்பாடுகள்**

1) அரசமைப்பின் அடிப்படை உரிமைகள், கடமைகள், மனித உரிமைகள், குழந்தை உரிமைகள், வாழ்க்கைத் திறன்கள், பிற உரிமைகள் தொடர்பான பயிற்சிகளையும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்துதல்
2) அரசமைப்பு உரிமை, குழந்தை உரிமைகள் மற்றும் சமூக பிரச்சனைகள் சார்ந்த விவாதம், கலந்துரையாடல், ஓவியம் வரைதல், வினாடி வினா போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்
3) சமூக விழிப்புணர்வுப் பாடல்களைக் கற்றுக் கொள்வதும் கற்றுக் கொடுப்பதும்
4) அரசமைப்பு உரிமைகள் பற்றி எழுதும், வாசிக்கும் பழக்கத்தை குழு உறுப்பினர்களிடம் ஏற்படுத்துதல்
5) தினசரி நாளிதழ்களிலும் நூல்களிலும் குழந்தை உரிமை தொடர்பான செய்திகளைச் சேகரித்து மன்றக் கூட்டங்களில் பகிர்தல்

6) தங்கள் பகுதிகளில் பள்ளி இடைநின்ற குழந்தைகள், குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைக் கடத்தல், புலம் பெயர் குழந்தைகள், மாற்றுத்திறன் குழந்தைகள் குறித்த தகவல்களைச் சேகரித்தல்.

### 4.2. குழந்தை உரிமைக் கண்காணிப்பு குழு

தங்கள் பகுதிகளில் குழந்தை உரிமை மீறல்கள் குறித்து மன்றத்தின் கவனத்திற்கு தெரிய வரும் பிரச்சனைகளை கண்காணித்து உரிய முறையில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை இக்குழு மேற்கொள்ளும்.

**மாதிரி செயல்பாடுகள்**

1) பள்ளியில், வீட்டில், அக்கம்பக்கத்தில் நடைபெறும் உரிமை மீறல்களை அடையாளம் கண்டு, நெறியாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்

2) மன்றத்தில் உள்ள குழந்தைகள், தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் அல்லது தங்கள் பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட உரிமை மீறல் சம்பவங்களை நெறியாளர் வழியாக குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளிடம் தெரியப்படுத்துதல்

3) பள்ளி நிர்வாகம், பெற்றோர் - ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மைக் குழு, கிராமக் கல்விக் குழு, குடிமைச் சமூக அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும்

4) குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளை உள்ளாட்சி அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்

5) பிற அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள், குழந்தைகள் நாடாளுமன்றம், குடிமைச் சமூக அமைப்புகள் ஆகியவற்றோடு இணைந்து செயல்படுதல்

6) கிராமசபைக் கூட்டங்கள், பிற குழந்தைகள் தொடர்பான ஒன்று கூடல்கள், மாநாடுகள், கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுதல்

## நிறைவாக

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் சிறப்பாக செயல்பட இந்த வழிக்காட்டு நெறிமுறைகள் உறுதுணையாக இருக்கும். இம்மன்ற விதிமுறைகளை நாம் மிக கவனமாகப் பின்பற்றுவதற்கான முயற்சிகளை ஆர்வத்தோடு எடுக்க வேண்டும். இது ஒரு கூட்டு முயற்சி. நாம் குழுவாக இணைந்து மேற்கொள்ள வேண்டிய பணிகளை இம்மன்ற விதிகள் சுட்டிக்காட்டுகிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் அனைத்தும் நமது எடுத்துக்காட்டுகளாக நமக்கு சுட்டிக்காட்டும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் விரிவாக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு நம் அனைவருக்கும் உரியது. மனித உரிமைகளை நம் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்.

**தொடக்க விழா மாதிரி நிகழ்ச்சி நிரல்**

1) சிறப்பு அழைப்பாளரை மேடைக்கு அழைத்தல்
2) மன்றத்தை அறிமுகப்படுத்துதல்
3) ஒருங்கிணைப்பாளர்கள், துணைக் குழுக்கள் அறிமுகம்
4) மன்ற பெயர்ப் பலகையினைத் திறந்து வைத்தல் (மன்றப் பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் திறந்து வைத்தல்)
5) மன்றம் தொடங்கியதன் அடையாளமாக மன்ற உறுதிமொழி, அரசமைப்பு சட்ட முகப்புரை மற்றும் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையை வாசித்தல், மன்ற பாடலைப் பாடுதல்
6) அச்சிடப்பட்ட மன்றத்தின் சட்ட விதிமுறைகளைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்குதல்
7) சிறப்பு அழைப்பாளரின் உரை
8) கலை நிகழ்ச்சிகள்
9) நிகழ்ச்சியை நிறைவு செய்தல்

**மன்றத்தின் நிகழ்ச்சிகள் (மாதிரிகள்)**

1) ஊர்வலம்
2) கருத்தரங்கம்
3) விவாத அரங்கம்
4) கிராமப் பொதுக் கூட்டம்
5) அரசமைப்பு நாள், குழந்தை உரிமை நாள், அனைத்துலக மனித உரிமை நாள், அனைத்துலக பெண்கள் நாள் போன்ற சிறப்பு நாட்களைக் கடைப்பிடிப்பது
6) வினாடி வினா
7) நாடகங்கள்
8) சுவரொட்டி தயாரித்தல்
9) பேச்சு ஆற்றலை ஊக்குவித்தல்
10) ஓவிய வரைதல்
11) கட்டுரை எழுதுதல்
12) முழுக்கங்கள் இயற்றுதல்
13) விளையாட்டுக்கள்
14) இன்னும் பல

**மாதிரி நிகழ்ச்சி நடத்தும் முறை**

1) பரிந்துரைக்கப்படும் விவாதப் பொருளை முடிவு செய்தல்
2) முன்கூட்டியே திட்டமிடல்
3) தேவையான பொருட்கள் மற்றும் மனித வளம் குறித்து பட்டியல் தயார் செய்தல்
4) நடைமுறைப்படுத்தும் முறைகளை ஆலோசித்து முடிவு செய்தல்
5) நிகழ்ச்சியில் விளையும் பயன்கள் அல்லது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து விவாதித்தல்
6) ஆதரவு தரும் தோழமை அமைப்புகள் மற்றும் நபர்கள் குறித்த பட்டியலை முன்கூட்டியே தயார் செய்தல்

குழந்தைகளுக்கான அரசமைப்பு
உரிமைக் கல்வி மன்றம்

Constitutional Rights Education Club
for Children (CRE Club)

# பிற்சேர்க்கை

அ

# குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் - ஓர் அறிமுகம்

“அரசமைப்பு உரிமைகளை குழந்தைகள் மத்தியில் பண்பாடாக வளர்த்தெடுப்போம்” என்ற இலக்கை முன் வைத்து, வான்முகில் அமைப்பின் முன்முயற்சியால் இந்த ஆண்டு தமிழகம் - புதுவையில் 17 மாவட்டங்களில் 125 கிராமங்களில் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 2700 குழந்தைகள் பங்கெடுக்கும் இக்கல்வித் திட்டத்தின் தொடக்க விழா 21 ஆகஸ்டு 2021 அன்று இணைய வழியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## 17 மாவட்டங்களில் 125 இடங்களில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள்

இத்திட்டம் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், புதுச்சேரி, பெரம்பலூர், சேலம், ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் பணிபுரியும் 10 அடித்தள அமைப்புகளோடு இணைந்து 125 குழந்தைகள் மையங்களில் முன்னெடுக்கப்படுகிறது. அரசுசாரா அமைப்புகள் நடத்தும் மாலை நேர குழந்தைகள் மையங்களில் மட்டுமல்லாது, பள்ளிகளிலும், மாணவர் விடுதிகளிலும் இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் வே.வசந்திதேவி அவர்களின் வழிகாட்டலும் ஆதரவும் இத்திட்டத்திற்கு உந்துதலாகவும் ஊக்கமாகவும் உள்ளது.

## அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் உன்னத மதிப்பீடுகள்

சுதந்திரம், சனநாயகம், சமத்துவம், சமூகநீதி, சகோதரத்துவம், தனிநபர் மாண்பு, பன்மைத்துவம் போன்ற மதிப்பீடுகளை இந்திய அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கிறது. ஆனால் இன்றைய இந்தியச் சூழலில் ஏற்றத்தாழ்வுகளும், சாதியப் பாகுபாடுகளும், சமயச் சண்டைகளும், சகிப்பின்மையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்கிறது. சுருங்கிவரும் சனநாயகப் பரப்பும், அதிகரித்து வரும் பாகுபாட்டுச் சிந்தனைகளும் பல்வேறு உரிமை மீறல்களுக்கும், வன்முறைகளுக்கும் வழிவகுக்கின்றன. எனவே அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் உன்னத மதிப்பீடுகளை குழந்தைகள் மத்தியில் வளர்த்தெடுக்கும் நோக்கில், இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் கொண்டு செல்லப்படுகிறது. குழந்தைகளை பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்கும் முயற்சியில் - சனநாயகத்திலும், மனித உரிமைகளிலும் நம்பிக்கை கொண்ட இளைய தலைமுறையை உருவாக்கும் எண்ணத்தில் – இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தில் பங்கேற்கும் குழந்தைகள்

இத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகள் அனைவரும் 11 முதல் 15 வயதைச் சார்ந்தவர்களாவர். இவர்கள் நடுநிலை அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் ஆவர். நலிவுற்ற சமூகங்களிலிருந்து அனைத்து தரப்பட்ட குழந்தைகளும் இதில் பங்கு பெறுவர். குறிப்பாக ஆதிவாசிக் குழந்தைகள், அருந்தியர் குழந்தைகள், தலித் குழந்தைகள், சீர்மரபினர் குழந்தைகள், மீனவக் குழந்தைகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகக் குழந்தைகள், சமயச் சிறுபான்மையினர் குழந்தைகள் போன்று பல்வேறுபட்ட குழந்தைகளும் பங்கேற்கும் இந்தத் திட்டத்தின் அடிநாதமாக இந்திய அரசமைப்பின் முகப்புரையும், அடிப்படை உரிமைகள் பகுதியும் அமையும்.

### அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களுக்கான பாடநூல்கள்

“இந்தியக் குடிமக்களாகிய நாம்”, “வாண்டுகள் பயணம்” என்ற தலைப்புகளில் இத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகளுக்கான இரு பாடநூல்கள் தயாராகி உள்ளன. விளையாட்டுகள், செய்முறைப் பயிற்சிகள், பாடல்கள், கதைகள், மேற்கோள்கள், உண்மைச் சம்பவங்கள் போன்றவை மூலம் குழந்தைகளுக்கு எளிதாக புரியும் வகையிலும், குழந்தைகளின் முழுமையான பங்கேற்பை உறுதிசெய்யும் நோக்கிலும் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பத்துக்கும் மேற்பட்ட கல்வியாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் இணைந்து பல்வேறு கட்டங்களாக உருவாக்கிய இப்பாடநூல்கள் அச்சு வடிவில் மட்டுமல்லாது, மின்னணு வடிவிலும் வெளிவரவிருக்கிறது.

### அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற நெறியாளர்களுக்கான பயிற்சி

125 கிராமங்களில் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை வழிநடத்தும் நெறியாளர்களுக்கு கடந்த செப்டம்பர் 21, 22, 23 ஆகிய மூன்று நாட்கள் திருச்சியில் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 17 மாவட்டங்களிலிருந்து 70 நெறியாளர்கள் கலந்து கொண்டனர். ஏற்கெனவே இக்கல்வி மன்றங்களுக்கான தயாரிப்புப் பணிகளை கிராம அளவில் மேற்கொண்ட இவர்களுக்கு அரசமைப்பு உரிமைகளைப் பற்றிய அடிப்படைப் புரிதலை உருவாக்கி, குழந்தைகள் மத்தியில் இக்கல்வியைச் சிறப்பாகக் கொண்டு செல்லத் தேவைப்படும் திறன்களை வளர்க்கும் நோக்கில் இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாடநூல்களை நெறியாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, அவற்றை குழந்தைகளுக்கு எடுத்துச் செல்லத் தேவையான செய்முறைப் பயிற்சியும், அரசமைப்பு உரிமை கல்வி மன்றங்களின் இலக்கு, திசைவழி, நோக்கங்கள் மற்றும் செயற்திட்டங்கள் குறித்த தெளிவும் இப்பயிற்சியில் வழங்கப்பட்டுள்ளது.

**அரசுப் பள்ளிகளில் அரசமைப்பு உரிமைக் கல்வி**

தமிழ்நாட்டில் கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பள்ளிகள் கடந்த 18 மாதங்களாகத் திறக்கப்படவில்லை. இவ்வாண்டு நவம்பர் 1-ஆம் தேதி முதல் 1 முதல் 8 வகுப்புகள் வரையிலான வகுப்புகள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை அனைத்து அரசு பள்ளிகளிலும் கொண்டு செல்லும் நோக்கில் பள்ளிக் கல்வித்துறை ஆணையாளர் திரு. நந்தகுமார் இ.ஆ.ப. அவர்களை நேரில் சென்று சந்தித்து இத்திட்டத்தை விளக்கியபோது, அவர் ஆர்வத்துடன் கேட்டறிந்து இதனைப் பரிசீலனை செய்வதாக கூறியுள்ளார். ஏற்கெனவே 26.08.2021 அன்று நடைபெற்றச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதே கோரிக்கையை வலியுறுத்தி மணப்பாறை சட்டமன்ற உறுப்பினரும் மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலாளருமான திரு.அப்துல் சமது அவர்கள், கல்வி மானியக் கோரிக்கையின் போது பேசியது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஆக்கப்பூர்வமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

# ஆ அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் குழந்தைகள் - ஒரு பார்வை

### 1. குழந்தைகள் தன்விவரப் படிவம்

இம்மன்றங்களில் குழந்தைகள் இணைவதற்கான முயற்சிகளை மாவட்ட தோழமை அமைப்புகளின் நெறியாளர்கள் மேற்கொண்டனர். இதற்கென குழந்தைகள் தன்விவரப் படிவம் உருவாக்கப்பட்டு அவை வாராந்திர நெறியாளர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அது கூகுள் படிவமாக மாற்றப்பட்டு இணையவழியில் பூர்த்தி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது. இதில் மாவட்டம், வட்டம், ஒன்றியம், பஞ்சாயத்து, கிராமம், குழந்தையின் பெயர், பாலினம், வயது, தாய் பெயர், தந்தை பெயர், பாதுகாவலர் பெயர், தந்தை அல்லது பாதுகாவலர் பிரதான தொழில், உடன் பிறந்தவர்கள் விவரம், மதம், சமூகம், பள்ளியின் பெயர், பயிலும் அல்லது பயின்ற வகுப்பு, ஆண்டு, வீட்டு முகவரி, தொடர்பு எண் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

### 2. படிவங்களைப் பூர்த்தி செய்யும் நிலை குறித்த திறனாய்வுக் கூட்டம்

அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தின் இயக்குனர் தலைமையிலான மையக்குழுவினர் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று மாலை 3 மணியளவில் இணையவழியில் “நெறியாளர்களுக்கான வாரந்திரக் கூட்டத்தினை” ஒருங்கிணைப்பு செய்கிறார்கள். இதில் திட்டம் சார்ந்த பல்வேறு பொருள்கள் குறித்து விவாதம் நடக்கும் சூழல் உருவாக்கப்படுகிறது. இக்கூட்டத்தில் “குழந்தைகள் தன்விவர கூகுள் படிவம்” பூர்த்தி செய்யப்படும் நிலை குறித்து தொடர்ந்து விவாதிக்கப்பட்டு திறனாய்வு செய்யப்பட்டது. நெறியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பகிர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டன. பிற மாவட்டங்களில், பகுதிகளில் இதேபோன்ற


பிரச்சனைகளை எதிர்கொண்ட நெறியாளர்கள் அதிலிருந்து மீண்ட அனுபவங்களை பகிர்வதற்கான வாய்ப்புகளும் இருந்தன. பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள பல்வேறு ஆலோசனைகளும் கூடுதல் கால அவகாசமும் அளிக்கப்பட்டன.

**3. குழந்தைகள் தன்விவர கூகுள் படிவம் ஓர் பகுப்பாய்வு**

தமிழ்நாடு - புதுச்சேரியில் 17 மாவட்டங்களில் 125 பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களில் உறுப்பினர்களாக இணைந்த 2662 குழந்தைகள் சார்ந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு, அவை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு இங்கே முறையாக தொகுக்கப்பட்டு தரப்பட்டுள்ளன.

**அ) குழந்தைகளின் பாலினம்**


இப்போது மன்றங்களில் இணைந்துள்ள குழந்தைகளில் 53% பெண் குழந்தைகளும் 47% ஆண் குழந்தைகளும் உறுப்பினர்களாக உள்ளனர். மன்றங்களில் பாலின சமத்துவம் நிலவ வேண்டும் என்ற குறிக்கோள் அனைவரது கூட்டு முயற்சியால் நிறைவேற்றப் பட்டிருப்பது மகிழ்ச்சியே.




**ஆ) குழந்தைகளின் வயது**

மன்றங்களில் 11 முதல் 14 வயது வரையிலான குழந்தைகள் உறுப்பினர்களாக இணையலாம் என அறிவிப்பு கொடுக்கப்பட்டது. குறிப்பாக 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளை உறுப்பினர்களாக இம்மன்றங்களில் இணைக்கலாம்


என தெரிவிக்கப்பட்டது. இவற்றில் அதிகபட்சமாக 24.8% குழந்தைகள் 12 வயதினராகவும், 23.6% குழந்தைகள் 13 வயதினராகவும், 19.9% குழந்தைகள் 11 வயதினராகவும், 16.2% குழந்தைகள் 14 வயதினராகவும், 8.7% குழந்தைகள் 15 வயதினராகவும், 6.8% குழந்தைகள் 10 வயதினராகவும் உள்ளனர். மன்றம் அமைந்துள்ள பகுதியில் உள்ள 5ஆம் வகுப்பு (10 வயது) பயிலும் குழந்தைகளும், 10ஆம் வகுப்பு (15 வயது) பயிலும் குழந்தைகளும் மன்றத்தில் இணைவதற்கு ஆர்வம் தெரிவித்துள்ளனர். குழந்தைகளை விட்டுவிட வேண்டாம் என்ற நோக்கில் அவர்களும் மன்றங்களில் இணைக்கப்பட்டனர்.




**இ) குழந்தைகள் சார்ந்துள்ள சமயம்**


எந்த சமயத்தைச் சார்ந்த குழந்தைகளும் மன்றங்களில் உறுப்பினர்களாக இணையலாம் என அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மன்ற உறுப்பினர்களில் 87.1% குழந்தைகள் இந்து சமயத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும், 11.9% குழந்தைகள் கிறித்தவ சமயத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும்,1% குழந்தைகள் இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும் உள்ளார்கள் என்று இத்தகவல் திரட்டலில் தெரிய வருகிறது. பன்மைத்துவத்தை வலியுறுத்தும் இக்கல்வித்திட்டத்தில் எச்சமயத்தைச் சார்ந்த

குழந்தைகளும் முழுமையாக பங்கேற்க வழிவகை உண்டு என வலியுறுத்தப்படுகிறது.




**ஈ) குழந்தைகளின் சமூகப் பின்னணி**

எந்த சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளும் மன்றங்களில் உறுப்பினர்களாக இணையலாம் என அறிவிப்பு கொடுக்கப்பட்டது. குறிப்பாக விளிம்புநிலை சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது. சென்னை போன்ற பெருநகரங்களில் கட்டாய இடப்பெயர்வுக்கு உள்ளான நகர்ப்புற குழந்தைகள் வசிக்கும் பகுதிகளும் இதில் அடங்கும்.





இதுவரை இணைந்துள்ள மன்ற உறுப்பினர்களில் 36.3% குழந்தைகள் பட்டியல் சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும், 34.3% குழந்தைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த

குழந்தைகளாகவும் (மீனவ சமூக குழந்தைகளும் உள்ளடங்குவர்), 12% குழந்தைகள் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த குழந்தைகளாகவும், 11.6% குழந்தைகள் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும், 4.2% குழந்தைகள் அருந்ததியினர் சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும், 1% குழந்தைகள் சீர்மரபினர் சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும், 0.6% குழந்தைகள் பொதுப்பிரிவினர் சமூகத்தைச் சார்ந்த குழந்தைகளாகவும் இருக்கிறார்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

**உ) கடைசியாக பயின்ற வகுப்பு**

மன்றத்தில் உறுப்பினராக இணைந்துள்ள குழந்தைகள் கடைசியாக பயின்ற வகுப்பு குறித்த கேள்வியும் இடம்பெற்றிருந்தது. இதில், 26.8% குழந்தைகள் ஆறாம் வகுப்பும், 23.3% குழந்தைகள் ஏழாம் வகுப்பும், 19.6% குழந்தைகள் எட்டாம் வகுப்பும், 17.2% குழந்தைகள் ஐந்தாம் வகுப்பும், 13.1% குழந்தைகள் ஒன்பதாம் வகுப்பும் பயின்றவர்கள் என அறியமுடிகிறது.



# அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் பெயர்ப் பட்டியல் தமிழ்நாடு - புதுச்சேரி

(டிசம்பர் 2021 வரையிலான பட்டியல்)

| வ. எண் | மாவட்டம் | அமைப்பு / இயக்கம் | மன்றத்தின் பெயர் | நெறியாளர் | மன்ற எண் |
|---|---|---|---|---|---|
| 01. | திருநெல்வேலி | வான்முகில் | கொண்டாநகரம் | T. சத்ய சொர்ணா | CRE/TN/Nellai/2021/01 |
| 02. | | | பழவூர் | P. செல்வி | CRE/TN/Nellai/2021/02 |
| 03. | | | வாகைக்குளம் | C. இசக்கிஅம்மாள் | CRE/TN/Nellai/2021/03 |
| 04. | | | சுத்தமல்லி | E. சித்ரா | CRE/TN/Nellai/2021/04 |
| 05. | | | உலுப்படிபாறை | M. பாப்புமாரி | CRE/TN/Nellai/2021/05 |
| 06. | | | மேலக்கூனியூர் | K. வள்ளிமயில் | CRE/TN/Nellai/2021/06 |
| 07. | | | அம்பேத்கார் நகர் | M. சாந்தி | CRE/TN/Nellai/2021/07 |
| 08. | | | முனிசிபல் காலனி | | CRE/TN/Nellai/2021/08 |
| 09. | | | மேலப்பாளையம் | S. முத்துலெட்சுமி | CRE/TN/Nellai/2021/09 |
| 10. | | | சி.என். கிராமம் | | CRE/TN/Nellai/2021/10 |
| 11. | தென்காசி | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்புச் சங்கம் | புளியங்குடி | R. மணிகண்டன் | CRE/TN/TSI/2021/11 |
| 12. | விருதுநகர் | வான் முகில் | நூர்சாகிபுரம் | R. மாரியம்மாள் | CRE/TN/VNR/2021/12 |
| 13. | | | பெரும்பள்சேரி | P. சங்கீதா | CRE/TN/VNR/2021/13 |
| 14. | | | கொத்தன்குளம் | R. ராஜலட்சுமி | CRE/TN/VNR/2021/14 |
| 15. | | | இடையபொட்டல்பட்டி | P. மல்லிகா | CRE/TN/VNR/2021/15 |
| 16. | | | சுண்டங்குளம் | A. பத்மா | CRE/TN/VNR/2021/16 |
| 17. | | | தொம்பக்குளம் | K. உஷா | CRE/TN/VNR/2021/17 |
| 18. | | | P. திருவேங்கிடபுரம் | R. செல்வி | CRE/TN/VNR/2021/18 |
| 19. | | | கொங்கன்குளம் | P. பாண்டிசெல்வி | CRE/TN/VNR/2021/19 |
| 20. | | | கீழராஜகுலராமன் | P. கயல்விழி | CRE/TN/VNR/2021/20 |
| 21. | | | A. லட்சுமியாமியபுரம் | R. இந்துராணி | CRE/TN/VNR/2021/21 |
| 22. | விருதுநகர் | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்புச் சங்கம் | கண்ணகி காலணி | A. சத்யகலா | CRE/TN/VNR/2021/22 |

| வ. எண் | மாவட்டம் | அமைப்பு / இயக்கம் | மன்றத்தின் பெயர் | நெறியாளர் | மன்ற எண் |
|---|---|---|---|---|---|
| 23. | தூத்துக்குடி | தூண்டில் மாணவர் இயக்கம் | ஆலந்தலை-1 | T. சலோமி | CRE/TN/TUTY/2021/23 |
| 24. | | | ஆலந்தலை-2 | | CRE/TN/TUTY/2021/24 |
| 25. | | | மணப்பாடு-1 | | CRE/TN/TUTY/2021/25 |
| 26. | | | மணப்பாடு-2 | | CRE/TN/TUTY/2021/26 |
| 27. | | | பெரியதாழை-1 | | CRE/TN/TUTY/2021/27 |
| 28. | | | பெரியதாழை-2 | | CRE/TN/TUTY/2021/28 |
| 29. | திருநெல்வேலி | | கூட்டப்பனை | K. ஆர்க்ளின் | CRE/TN/Nellai/2021/29 |
| 30. | | | இடிந்தகரை | | CRE/TN/Nellai/2021/30 |
| 31. | | | பெருமணல் | | CRE/TN/Nellai/2021/31 |
| 32. | | | கூட்டப்புளி | | CRE/TN/Nellai2021/32 |
| 33. | தூத்துக்குடி | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்புச் சங்கம் | தூத்துக்குடி | M. கிருஷ்ணன் | CRE/TN/TUTY/2021/33 |
| 34. | இராமநாதபுரம் | தமிழ்நாடு கிராம புனரமைப்பு இயக்கம் - **TRRM** | மீனவர்குப்பம் | S. முனீஸ்வரி | CRE/TN/RMD/2021/34 |
| 35. | | | சிவகாமிபுரம் | S. சின்னப்பன் | CRE/TN/ RMD /2021/35 |
| 36. | | | இடிந்தகல் புதூர் | S. சின்னப்பன் | CRE/TN/ RMD /2021/36 |
| 37. | | | பக்கிரப்பா பள்ளி வாசல் | M. இலக்கியா | CRE/TN/ RMD /2021/37 |
| 38. | | | மங்களேஸ்வரி நகர்-1 | K. அனிதா | CRE/TN/ RMD /2021/38 |
| 39. | | | மங்களேஸ்வரி நகர்-2 | K. அனிதா | CRE/TN/ RMD /2021/39 |
| 40. | | | கிழக்கு புதுநகர் | S. முனீஸ்வரி | CRE/TN/ RMD /2021/40 |
| 41. | | | பாரதிநகர்-1 | U. கலா | CRE/TN/ RMD/2021/41 |
| 42. | | | பாரதிநகர்-2 | U. கலா | CRE/TN/ RMD /2021/42 |
| 43. | | | விவேகானந்தபுரம் | U. கலா | CRE/TN/ RMD /2021/43 |
| 44. | சிவகங்கை | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்புச் சங்கம் | திருப்புவனம் | ஏ.வித்யா | CRE/TN/ SVG /2021/44 |
| 45. | மதுரை | | மொட்டமலை | T. கவிதா | CRE/TN/MDU/2021/45 |
| 46. | | | பெத்தானியபுரம் | N. நித்யா | CRE/TN/MDU/2021/46 |
| 47. | | | வாடிப்பட்டி | P. முனீஸ்வரி | CRE/TN/MDU/2021/47 |
| 48. | திண்டுக்கல் | சைல்டு வாய்ஸ் | மணியக்காரன்பட்டி | B. அபிராமி | CRE/TN/DGL/2021/48 |
| 49. | | | நூத்து லாபுரம் | S. சந்தியா | CRE/TN/DGL/2021/49 |
| 50. | | | வீலிநாயக்கன்பட்டி | G. ராமஜெயம் | CRE/TN/DGL/2021/50 |
| 51. | | | தோப்புப்பட்டி | V. பொதுமை | CRE/TN/DGL/2021/51 |
| 52. | | | காமாட்சிபுரம் | R. முருகேஸ்வரி | CRE/TN/DGL/2021/52 |
| 53. | | | வில்பட்டி | K. பிரியா | CRE/TN/DGL/2021/53 |
| 54. | | | கோவில்பட்டி | R. பாப்பாத்தியம்மாள் | CRE/TN/DGL/2021/54 |
| 55. | | | ரெட்டியபுரம் சத்யா காலனி | M. பிரியா | CRE/TN/DGL/2021/55 |

| வ. எண் | மாவட்டம் | அமைப்பு / இயக்கம் | மன்றத்தின் பெயர் | நெறியாளர் | மன்ற எண் |
|---|---|---|---|---|---|
| 56. | | | அட்டுவம்பட்டி | S. சேசுதா | CRE/TN/DGL/2021/56 |
| 57. | | | பாறைப்பட்டி | C. ஜாக்குலின் ஜென்னிபர் | CRE/TN/DGL/2021/57 |
| 58. | தேனி | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்புச் சங்கம் | காமாட்சிபுரம் | P. ஐஸ்வர்யா | CRE/TN/TENI/2021/58 |
| 59. | ஈரோடு | சுடர் | கொங்காடை | S. யுவராஜ் | CRE/TN/ED/2021/59 |
| 60. | | | தாமரைக்கரை | | CRE/TN/ED/2021/60 |
| 61. | | | பர்கூர் | | CRE/TN/ED/2021/61 |
| 62. | | | தேவர்மலை | | CRE/TN/ED/2021/62 |
| 63. | | | தம்பு ரெட்டி | | CRE/TN/ED/2021/63 |
| 64. | | | நகலூர் | ஆ.மாரிமுத்து | CRE/TN/ED/2021/64 |
| 65. | | | கானக்குந்தூர் | | CRE/TN/ED/2021/65 |
| 66. | | | பவளக்குட்டை | | CRE/TN/ED/2021/66 |
| 67. | | | அட்டணை | | CRE/TN/ED/2021/67 |
| 68. | | | ஒசப்பாளையம் | | CRE/TN/ED/2021/68 |
| 69. | சேலம் | பவர் டிரஸ்ட் | அம்மம்பாளையம் | ஆ. கவிதா | CRE/TN/SLM/2021/69 |
| 70. | | | தூலுக்கனூர் | | CRE/TN/ SLM /2021/70 |
| 71. | | | தாண்டவராயபுரம் | | CRE/TN/ SLM /2021/71 |
| 72. | | | ராமநாயக்கன் பாளையம் | | CRE/TN/ SLM /2021/72 |
| 73. | | | சீலியம்பட்டி | | CRE/TN/ SLM /2021/73 |
| 74. | | | பகுடுபட்டு | சு. ஜெகதாம்பாள் | CRE/TN/ SLM /2021/74 |
| 75. | | | முடவன்கோவில் | | CRE/TN/ SLM /2021/75 |
| 76. | | | காரியக்கோவில் | | CRE/TN/ SLM /2021/76 |
| 77. | | | கோவில்புத்தூர் | ஊ. ராமு | CRE/TN/ SLM /2021/77 |
| 78. | | | குன்னூர் | | CRE/TN/ SLM /2021/78 |
| 79. | தருமபுரி | ரியல் பவுண்டேசன் | போடூர் போயர் காலணி | மு. முத்துமாரி | CRE/TN/DMP/2021/79 |
| 80. | | | கள்ளி புரம் | | CRE/TN/ DMP /2021/80 |
| 81. | | | கூத்தபாடி | | CRE/TN/ DMP /2021/81 |
| 82. | | | மாங்கரை | | CRE/TN/ DMP /2021/82 |
| 83. | | | குள்ளாத்திரம்பட்டி | | CRE/TN/ DMP /2021/83 |
| 84. | | | ஏறுகோல்பட்டி | ஆ. தனலட்சுமி | CRE/TN/ DMP /2021/84 |
| 85. | | | ஏறுகோல்பட்டி காலணி | | CRE/TN/ DMP /2021/85 |
| 86. | | | வடகாடு | | CRE/TN/ DMP /2021/86 |
| 87. | | | காட்டு மோட்டூர் | | CRE/TN/ DMP /2021/87 |
| 88. | | | பூச்சூர் | | CRE/TN/ DMP /2021/88 |

| வ. எண் | மாவட்டம் | அமைப்பு / இயக்கம் | மன்றத்தின் பெயர் | நெறியாளர் | மன்ற எண் |
|---|---|---|---|---|---|
| 89. | பெரம்பலூர் | இந்தோ அறக்கட்டளை | பெருமாள் பாளையம் | P. ரத்தினசிகாமணி | CRE/TN/PLU/2021/89 |
| 90. | | | மலையப்ப நகர் | | CRE/TN/PLU/2021/90 |
| 91. | | | மேட்டுப்பாளையம் | K. சுதா | CRE/TN/PLU/2021/91 |
| 92. | | | வாலிகண்டாபுரம் | | CRE/TN/PLU/2021/92 |
| 93. | | | தேவையூர் | | CRE/TN/PLU/2021/93 |
| 94. | | | கழனிவாசல் | C. நளினி | CRE/TN/PLU/2021/94 |
| 95. | | | லப்பைகுடிக்காடு | | CRE/TN/PLU/2021/95 |
| 96. | | | நோவாநகர் | | CRE/TN/PLU/2021/96 |
| 97. | | | கீரனூர் | | CRE/TN/PLU/2021/97 |
| 98. | | | எறையூர் | | CRE/TN/PLU/2021/98 |
| 99. | கடலூர் | ஹோப் நிறுவனம் | எஸ். என். நகர் | V. காயத்ரி | CRE/TN/CUL/2021/99 |
| 100. | | | நாகம்மா பேட்டை | B. சங்கீதா | CRE/TN/CUL/2021/100 |
| 101. | | | எஸ். புதூர் | B. சங்கீதா | CRE/TN/CUL/2021/101 |
| 102. | | | புதுக்குளம் | மரிய ஸ்டெல்லா | CRE/TN/CUL/2021/102 |
| 103. | | | கரைமேடு | | CRE/TN/CUL/2021/103 |
| 104. | செங்கல்பட்டு/ சென்னை | தோழமை | செம்மஞ்சேரி- 3வது அவென்யூ | R. யுவராணி | CRE/TN/CGL/2021/104 |
| 105. | | | பெரும்பாக்கம், பிளாக் எண்:4,2,5 | | CRE/TN/CGL/2021/105 |
| 106. | | | செம்மஞ்சேரி- 7வது அவென்யூ | N. சங்கீதா | CRE/TN/CGL/2021/106 |
| 107. | | | பெரும்பாக்கம், பிளாக் எண்: 8,6,9 | | CRE/TN/CGL/2021/107 |
| 108. | | | செம்மஞ்சேரி - 8வது அவென்யூ | D. கோமதி | CRE/TN/CGL/2021/108 |
| 109. | | | பெரும்பாக்கம், பிளாக் எண்:112,113,114 | | CRE/TN/CGL/2021/109 |
| 110. | | | செம்மஞ்சேரி-3வது அவென்யூ | R. லாவண்யா | CRE/TN/CGL/2021/110 |
| 111. | | | பெரும்பாக்கம், பிளாக் எண்:116, 115, 112 | | CRE/TN/CGL/2021/111 |
| 112. | | | செம்மஞ்சேரி- 3வது அவென்யூ | K. விஜயலட்சுமி | CRE/TN/CGL/2021/112 |
| 113. | | | பெரும்பாக்கம், பிளாக்எண்:115,7,8 | | CRE/TN/CGL/2021/113 |
| 114. | மதுரை | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்புச் சங்கம் | பெத்தானியாபுரம்-2 | N. சங்கீதா | CRE/TN/MDU/2021/114 |

| வ. எண் | மாவட்டம் | அமைப்பு / இயக்கம் | மன்றத்தின் பெயர் | நெறியாளர் | மன்ற எண் |
|---|---|---|---|---|---|
| 115. | புதுச்சேரி | ஹோப் நிறுவனம் | கனகசெட்டிக்குளம் | F. வேளாங்கண்ணி ரூபன் | CRE/PDY/2021/115 |
| 116. | | | பிள்ளைச்சாவடி | | CRE/PDY/2021/116 |
| 117. | | | காலாப்பேட் | | CRE/PDY/2021/117 |
| 118. | | | சாமிபிள்ளைத்தோட்டம் | | CRE/PDY/2021/118 |
| 119. | | | துப்ராயபேட் | | CRE/PDY/2021/119 |
| 120. | | | மாணிக்கச்செட்டியார் நகர் | V. உதயக்குமார் | CRE/PDY/2021/120 |
| 121. | | | பிச்சவீரான்பேட் | | CRE/PDY/2021/121 |
| 122. | | | கூடப்பாக்கம் | | CRE/PDY/2021/122 |
| 123. | | | கொம்பாக்கம் | | CRE/PDY/2021/123 |
| 124. | | | வில்லியனூர் | | CRE/PDY/2021/124 |
| 125. | திருநெல்வேலி | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்புச் சங்கம் | இராமையன்பட்டி | A. மாலதி | CRE/TN/Nellai/2021/125 |

# ரு மன்றங்களின் தொடக்க விழாவிற்கான வழிகாட்டுதல்கள்

**1. எப்போது?**

குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் தொடக்க விழாவுக்கான தேதியை அந்தந்த அமைப்புகள் முடிவு செய்து கொள்ளவும். இத்தொடக்க விழாவினை வரும் அக்டோபர் மாதம் இறுதிக்குள் மாவட்டத்தில் உள்ள பத்து மன்றங்களின் நிறைவு செய்யுமாறு வேண்டுகிறோம். நமது கூட்டத்தில் ஏற்கெனவே முடிவு செய்தவாறு, மன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்களில் பொருத்தமான வேறு பெயர்களில் இந்நிகழ்வுகளை நடத்திக் கொள்ளலாம்.

**2. எங்கே?**

மன்றங்கள் செயல்படும் பகுதியிலேயே தொடக்க விழாவை நடத்துவது பொருத்தமாக இருக்கும்.மன்றங்கள் செயல்படும் பகுதியில் இதுபோல் தொடர் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்ற இடத்தை தெரிவு செய்வது அவசியம். நிகழ்வு நடைபெறும் இடம் அரங்கமாகவோ அல்லது திறந்தவெளியாகவோ இருக்கலாம்.

**3. நிகழ்வு ஒருங்கிணைப்பு**

இந்த தொடக்க விழாவினை “குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத் தொடக்க விழா” எனும் பெயரில் ஒருங்கிணைப்பது அவசியம். தாங்கள் வேறு பெயரில் நடத்த விரும்பினால், பொருத்தமான பெயர்களில் நடத்தலாம். கொரோனா பெருந்தொற்றுச் சூழலை கவனத்தில் கொண்டு உரிய பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி நிகழ்வினை ஒழுங்கு செய்திட வேண்டுகிறோம்.

**4. பதாகைகள் (Flex)**

மன்றத் தொடக்கவிழா அரங்கில் எழுது பலகை (White Board) மற்றும் கீழ்க்கண்ட பதாகைகள் வெளியிடுவது, பின் காட்சிப்படுத்துவது அவசியம் எனக் கருதுகிறோம்.

a) மன்றப் பெயர்பலகையினை 4 அடி நீளம் - 3 அடி அகலம் (4 x 3) உள்ள அளவில் பிளெக்ஸில் பிரிண்ட் எடுத்து அதனை பொருத்தமான மரம் / இரும்பு பட்டைகளில் இணைத்து, துணியினால் மறைத்து ரிப்பன் கட்டி நிகழ்வு அரங்கில் வைத்திட வேண்டுகிறோம். சிறப்பு விருந்தினர் ஒருவரால் முறையாக அதனை திறந்து வைத்திட செய்யலாம். பகுதி சூழல் கருதி இந்த அளவினை மாற்ற விரும்பினால் 4 x 2 அளவுகளில் மாற்றிக் கொள்ளலாம்.

b) உறுதிமொழிப் பதாகையினை 2½ அடி நீளம் - 2 அடி அகலம் (2½ x 2) உள்ள அளவில் “பிளெக்ஸில்” அல்லது “கடின அட்டையில்” பிரிண்ட் எடுத்து அதனை சுருட்டி ரிப்பன் கட்டி, ஒரு சிறப்பு விருந்தினர் மூலம் வெளியீடு செய்யலாம். இதேபோல், குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை, முகப்புரை, கொரோனா பாதுகாப்பு நடத்தை முறைகள் ஆகியவற்றையும் வெளியிடலாம்.

**5. யாரெல்லாம் பங்கேற்கலாம்?**

இந்நிகழ்வில் மன்றக் குழந்தைகள், பெற்றோர், குடிமைச் சமூக அமைப்புகள், உள்ளூர் பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், கல்வித்துறை அலுவலர்கள், பெண்கள் அமைப்பினர் உள்ளிட்டோரை பங்கேற்க அழைப்பு விடுக்கலாம். அந்தந்த மாவட்ட அமைப்பின் இயக்குனர் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறுவது நன்று.

**6. சிறப்பு அழைப்பாளர்கள்**

இந்நிகழ்விற்கு அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களில் இருந்து ஏதேனும் ஒரு அலுவலர் (DCPU,

CWC, SPJU), குழந்தை உரிமைக்காக செயலாற்றும் அமைப்புகள், ஆசிரியர்கள், பள்ளிக் கல்விதுறையில் இருந்து ஏதேனும் ஒரு அலுவலர், ஏதேனும் ஒரு காவல்துறை அலுவலர் ஆகியோரை தொடக்க விழாவுக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கலாம். இந்நிகழ்வுக்கான நிகழ்ச்சி நிரலை மாவட்ட அமைப்பு தயார் செய்திட வேண்டும். நிகழ்வில் குழந்தைகளின் பங்கேற்பு இருக்கும் வகையில் திட்டமிட்டால் கூடுதல் சிறப்பு.

**7. தகவல் பரப்புரையும் ஊடகத்தொடர்பும்**

மன்றத் தொடக்கவிழா நடைபெறுவது குறித்த பரப்புரையை சமூக ஊடகங்களில் மேற்கொள்வது நன்று. தொடக்கவிழா குறித்த ஊடகச் செய்தியை முன்னரே தயார் செய்து ஊடகங்களுக்கு அழைப்பிதழோடு அனுப்பிடலாம். தொடக்கவிழா முடிந்ததும் நிகழ்வு தொடர்பான நிழற்படங்கள் இணைக்கப்பட்ட ஊடகச் செய்தியினை தயார் செய்து அதனை ஊடகவியலாளர்களுக்கு அனுப்பிடலாம். இந்த ஊடக செய்தியினை அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம், வான்முகில், திருநெல்வேலி அமைப்பும் தங்கள் அமைப்பும் இணைந்து வழங்கிட வேண்டுகிறோம்.

உ

# மாவட்டத் தொடக்க விழாவிற்கான வழிகாட்டுதல்கள்

**1. எப்போது?**

குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் மாவட்டத் தொடக்க விழாவுக்கான நாள் – நேரத்தை அந்தந்த அமைப்புகள் ஆலோசித்து அதனை மாநில ஒருங்கிணைப்புக்குழுவுடன் கலந்து பேசி இறுதி செய்து கொள்ள வேண்டுகிறோம். இத்தொடக்க விழாவினை நவம்பர் மாதம் இறுதிக்குள் ஏதேனும் ஒரு நாளில் நடத்திட வேண்டுகிறோம்.

**2. எங்கே?**

நிகழ்வுக்குப் பொருத்தமான இடத்தினை அந்தந்த அமைப்புகளே முடிவு செய்யலாம். மாவட்ட தலைநகரங்களில் மையமான பகுதியில் ஏற்பாடு செய்தால் மாவட்ட அளவிலான குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் பங்கேற்க ஏதுவாக இருக்கும். இருப்பினும் உள்ளூர் சூழலை கணக்கில் கொண்டு குழந்தைகளின் கூடுதல் பங்கேற்பை ஊக்கப்படுத்தும் விதமாக ஏதாவது ஒரு கிராமத்தில் நிகழ்வை ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும் எனக் கருதினால் அவ்வாறே திட்டமிடலாம்.நிகழ்வு நடைபெறும் இடம் அரங்கமாகவோ அல்லது திறந்தவெளியாகவோ இருக்கலாம்.

**3. நிகழ்வு ஒருங்கிணைப்பு**

தொடக்கவிழா நிகழ்வினை அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம், வான்முகில், திருநெல்வேலி அமைப்பும் தங்கள் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திட வேண்டுகிறோம்.இதனை “குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் மாவட்டத் தொடக்க விழா” எனும் பெயரில் ஒருங்கிணைப்பது அவசியம். தாங்கள் வேறு பெயரில் நடத்த விரும்பினால், பொருத்தமான பெயர்களில் நடத்தலாம்.

**4. பதாகைகள் (Flex)**

தொடக்கவிழா அரங்கில் கீழ்க்கண்ட பதாகைகளை வெளியிடுவதும், பின் காட்சிப்படுத்துவதும் அவசியம்.

a) மன்றப் பெயர்பலகையினை 4 அடி நீளம் - 3அடி அகலம் (4 x 3) உள்ள அளவில் பிளெக்ஸில் பிரிண்ட் எடுத்து அதனை பொருத்தமான மரம் / இரும்பு பட்டைகளில் இணைத்து, துணியினால் மறைத்து ரிப்பன் கட்டி நிகழ்வு அரங்கில் வைத்திட வேண்டுகிறோம். சிறப்பு விருந்தினர் ஒருவரால் முறையாக அதனை திறந்து வைத்திட செய்யலாம். பகுதிச் சூழல் கருதி இந்த அளவினை மாற்ற விரும்பினால் 4 x 2 அளவுகளில் மாற்றிக் கொள்ளலாம்.

b) உறுதிமொழி பதாகையினை 2½ அடி நீளம் – 2 அடி அகலம் (2½ x 2) உள்ள அளவில் “பிளெக்ஸில்”அல்லது “கடின அட்டையில்” பிரிண்ட் எடுத்து அதனை சுருட்டி ரிப்பன் கட்டி, ஒரு சிறப்பு விருந்தினர் மூலம் வெளியீடு செய்யலாம். இதேபோல்,குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை, அரசமைப்பு முகப்புரை, கொரோனா பாதுகாப்பு நடத்தை முறைகள் ஆகியவற்றையும் வெளியிடலாம்.

**5. யாரெல்லாம் பங்கேற்கலாம்?**

இத்தொடக்கவிழாவில் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள 10 மன்றங்களின் குழந்தைகள், பெற்றோர், குடிமைச்சமூக அமைப்புகள், உள்ளூர் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், பெண்கள் அமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்க அழைப்பு விடுக்கலாம். மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பாக யாரேனும் ஒருவர் அல்லது இருவர் பங்கேற்பார்கள்.

**6. சிறப்பு அழைப்பாளர்கள்:**

மாவட்ட தொடக்க விழாவிற்கு அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் அனைத்து குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்கள் (DCPU, CWC, SPJU,

DSWO), மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலர், குழந்தை உரிமைக்காக செயலாற்றும் தோழமை அமைப்புகள், உளவியல் நிபுணர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோரை அழைக்கலாம்.மாவட்ட ஆட்சியர், மாவட்ட நீதிபதி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பது கூடுதல் சிறப்பைத் தரும். வாய்ப்புள்ள மாவட்டங்களில் இதனை பரிசிலிக்கலாம்.தங்கள் மாவட்டத்தில் உள்ள தங்களுக்கு அறிமுகமான நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை இத்தொடக்கவிழா நிகழ்விற்கு அழைப்பது சாலச்சிறந்தது.

**7. நிகழ்ச்சி நிரல்**

தொடக்க விழா நிகழ்ச்சி நிரலை மாவட்ட அமைப்பு தயார் செய்திட வேண்டுகிறோம். இறுதிசெய்யப்பட்ட நிகழ்ச்சிநிரல் அழைப்பிதழை மாநில ஒருங்கிணைப்புக்குழுவிற்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அனுப்பிட வேண்டுகிறோம்.

**8. தகவல் பரப்புரையும் ஊடகத்தொடர்பும்**

மாவட்ட தொடக்கவிழா நடைபெறுவது குறித்த பரப்புரையை சமூக ஊடகங்களில் மேற்கொள்வது நன்றாக இருக்கும்.தொடக்கவிழா குறித்த ஊடகச் செய்தியை முன்னரே தயார் செய்து ஊடகங்களுக்கு அழைப்பிதழோடு அனுப்பிடலாம். தொடக்கவிழா முடிந்ததும் நிகழ்வு தொடர்பான நிழற்படங்கள் இணைக்கப்பட்ட ஊடகச் செய்தியினை தயார் செய்து அதனை ஊடகவியலாளர்களுக்கு அனுப்பிடலாம். இந்த ஊடக செய்தியினை அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம், வான்முகில், திருநெல்வேலி அமைப்பும் தங்கள் அமைப்பும் இணைந்து வழங்கிட வேண்டுகிறோம்.

உள

## தமிழக அளவிலான தொடக்க விழாவில்
# மாண்புமிகு. சா.பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் சிறப்புரை

குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் தொடக்க விழாவில்
தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய தலைவர்
**மாண்புமிகு சா.பீட்டர் அல்போன்ஸ்** அவர்கள்,
21.08.2021 அன்று இணையவழியில் பேசிய உரை

அருமையான இந்தத் திட்டத்தை செயலாக்கத்திற்கு கொண்டு வந்துள்ள வான்முகில் அமைப்பிற்கு நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் காலத்தில் எது மிக அதிகம் தேவையோ, இந்தக் காலத்தில் எது குழந்தைகளுக்கு நன்றாக இருக்கும் என்று எல்லோரும் எண்ணுகிறோமோ, எது கிடைத்தால் இந்த நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்று நாம் முழுமையாக எதிர்பார்க்கிறோமோ, அந்த எதிர்காலத் திட்டத்திற்கு ஒரு அடிப்படையான பணியைச் செய்கின்ற இந்த அருமையான முயற்சியை வான்முகில் அமைப்பினர் தொடங்கி இருக்கிறார்கள். நம் நாட்டின் அரசியல் சாசனச் சட்டத்தின் அறிவையும், அது உத்திரவாதப்படுத்தும் உரிமைகளையும், நமக்கு அது தருகின்ற அங்கீகாரத்தையும் குழந்தைகள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக ஒரு அருமையான கல்வித் திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

ஒருமிகப் பெரிய பயணத்தின் முதற்கட்டம் ஒரு சிறிய அடி என்று சொல்வது போல, நாளை இரண்டரைக் கோடி குழந்தைகளுக்கு இந்தக் கல்வி அறிவைப் புகட்டுவதற்கு முன்னோட்டமாக, ஒரு புதிய முனைப்பாக, புது முன்னெடுப்பாகத்தொடங்கப்படும் இந்த வரலாற்று புகழ் மிக்க தருணத்தில் நாம் அனைவரும் பங்கேற்பது பெருமைக்குரியது. “அரசமைப்பு உரிமைகளை பண்பாடாக வளர்த்தெடுப்போம்” என்று அரசியல் அமைப்பு பற்றிய அறிவையும், புரிதலையும், அது நமக்கு வழங்கும் மிகப்பெரிய நன்மைகளையும் குழந்தைகளுக்கு வழங்கத் தயாராக உள்ளது.

சட்டத்தின்படி ஆட்சி நடக்காத நாட்டில், எவ்வளவு பெரிய கொடுமைகள் நடக்கும் - எப்படிப்பட்ட துயரங்கள் சம்பவிக்கும் - எப்படி மனித உயிர்கள் கொத்துக்கொத்தாக விலை பேசப்படும் - எவ்வளவு அநாகரிகமாக மனித உரிமைகள் நடத்தப்படும் - என்பதையெல்லாம் நாம் வாழும் போதே ஆப்கானிஸ்தானில் பார்க்கின்றோம். சட்டத்தின் ஆட்சி தோற்றுப் போகும் போது - இன்னும் தெளிவாகச் சொன்னால் - அரசியல் சாசனம் என்று ஒன்று இல்லாத அரசாங்கம் இருக்கும் போது, அதில் யார் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பார்ப்பதற்கு இன்றைய ஆப்கானிஸ்தான் தான் மிகப் பெரிய எடுத்துக் காட்டு.

அங்கு கையில் இருக்கும் குழந்தைகளை அந்தத் தாய்மார்கள் விமான நிலையத்தின் மதில் சுவருக்குமேல் தூக்கி எறியும் போது,"என் குழந்தையாவது சுதந்திரக் காற்றை சுவாசிக்கட்டும்; என் குழந்தையாவது ஒரு சமத்துவ நாட்டில் இருக்கட்டும்; என் குழந்தையாவது மனித உரிமைகளை பெறுகின்ற ஒரு மண்ணில் உயிர் வாழட்டும்", என்று அந்த தாய்மார்கள் குழந்தைகளை தூக்கிப் போடுகின்ற போது, அந்தக் குழந்தைகளைப் பிடிக்கின்ற பிரிட்டிஷ் இராணுவ வீரர்களின் கண்ணில் கண்ணீர் கசிவதும், அரசியல் சாசனச் சட்டம் எவ்வளவு முக்கியம் என்பதை நமக்கெல்லாம் உணர்த்தும் என எண்ணுகிறேன்.

இந்தியாவை ஒரு சுதந்திர நாடாக ஆக்கிக் கொடுத்ததன் மாபெரும் பயன் நமக்குக் கிடைத்திருக்கும் சட்டத்தின் ஆட்சி. இந்தியாவில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த நம் முன்னோர்கள், சுதந்திரத்தோடு தங்கள் பயணத்தை நிறுத்திக் கொள்ளவில்லை; மாறாக சுதந்திரத்திற்குப் பின்னால் இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்பதை தங்கள் கற்பனைகளிலே சிந்தித்தார்கள்; தங்கள் எண்ணங்களில் தேக்கினார்கள்; ஒவ்வொரு நாளும் இரவு படுக்கும் பொழுது கனவு கண்டு, இப்படிப்பட்ட இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று கனவு கண்டார்கள். அதைத் தான் நம் முன்னாள் பிரதமர்,"The IDEA of India" என்று சொல்லுவார். இந்தியா என்பது ஒரு நாடு மட்டுமல்ல; இந்தியா

என்பது பெரிய தத்துவம்; இந்தியா என்பது ஒரு கருத்தியல்; இந்தியா என்பது ஒரு மிகப்பெரிய அரசியல் ஏற்பாடு என்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அதற்கு எல்லாவிதமான பரிமாணங்கள் இருக்கின்றன. அது முழுமையான மனித வளர்ச்சியை பார்க்க வேண்டிய ஒரு மிகப்பெரிய தேடுதல். அதற்கு ஆதாரமாக இருக்கக் கூடியதுதான் இந்த நாட்டினுடைய அரசியல் சாசனச் சட்டம்.

எந்த மதத்தைச் சார்ந்த பள்ளிகளாக இருந்தாலும், எந்த எண்ண ஓட்டத்தைப் பின்புலமாக கொண்டவர்களாக இருந்தாலும், எந்தத் தத்துவத்தை உள்வாங்கியவர்களாக இருந்தாலும், அந்தப் பள்ளிக் கூடங்களிலே கண்டிப்பாக சொல்லிக் கொடுக்க வேண்டிய பாடம், இந்திய நாட்டின் அரசியல் சாசனச் சட்டம். அந்த அரசியல் சாசனச் சட்டஅறிவும், அதனுடைய புரிதலும் தான் - ஒரு முழுமையான குடிமகனை உருவாக்க முடியும் என்கிற மிகப்பெரிய தத்துவத்தை நாம் 70 ஆண்டுகளாக உணரவில்லை. நான் சட்டக் கல்லூரி வந்த பிறகு தான் இந்திய அரசமைப்புச் சட்டப் புத்தகத்தைப் பார்த்தேனே தவிர, அதையும் கூட முழுமையாக சட்டக் கல்லூரிக்குள் படிக்கின்ற வாய்ப்பைப் பெறவில்லை.

அரசியல் சட்டம்தான் மண்ணில் எல்லாவற்றையும் முடிவு செய்கிறது. இந்த நாட்டில் கலாச்சாரம் எப்படி இருக்க வேண்டும், இந்த நாட்டிலே தேர்தல்கள் எப்படி நடக்க வேண்டும், இந்த நாட்டில் ஆட்சி முறைகள் எப்படி அமைய வேண்டும், இந்த நாட்டிலே மனித உரிமைகள் எவ்வாறு பேணப்பட வேண்டும் என்று அனைத்து கோணங்களையும் ஆராய்ந்து, அவை முறையாக நடக்க வேண்டிய அதிகாரமிக்க நூல்தான், இந்திய நாட்டின் அரசியல் சாசனச் சட்டம். அந்த அரசியல் சாசனச் சட்டத்தை பற்றி நம்முடைய குழந்தைகள் படிக்க வேண்டாமா?

இந்த உலகத்திலே 796 அரசியல் சட்டங்களைப் பற்றி ஆராய்ந்தார்கள். இந்த அரசியல் சாசனச் சட்டங்கள் உருவானவிதம், அவை உருவாக்கப்பட்ட விதம், உருவாக்கியவர்களின் பின்னணி போன்றவற்றை ஆராய்ந்த பின்பு, அரசியல் சாசனச் சட்டம் எத்தனை

நாள் அந்த நாடுகளிலே அமலில் இருந்தது என்றெல்லாம் ஆராய்ந்தபொழுது, 50 விழுக்காடு அரசியல் சாசனச் சட்டங்கள் 17 ஆண்டுகளைத் தாண்டவில்லை என்ற உண்மை புலப்படுகிறது. 50 ஆண்டுகளைத் தாண்டிய அரசியல் சாசனச் சட்டங்கள் ஏறக்குறைய ஐந்து விழுக்காடுதான். பிறந்த இரண்டாவது வருடமே மரித்துப்போன அரசியல் சாசனச் சட்டங்கள் ஏறக்குறைய 35 விழுக்காட்டிற்கு மேலே. ஆகவே சராசரியாக பார்க்கின்ற பொது ஒரு அரசியல் சாசனச் சட்டத்தின் வயது 17 ஆண்டுகள்தான். ஆனால் இந்தியாவின் அரசியல் சாசனச் சட்ட வயது எழுபது. நூறு ஆண்டுகளை இந்த அரசியல் சாசனச் சட்டத்தை வைத்து தொட்டு விடுவோம். ஏனெனில் நம் அரசியல் சாசனச் சட்டம் நம் எண்ணங்களுக்கும், ஆசைகளுக்கும், காலத்தின் தேவைக்கும் ஏற்ப வளைந்து கொடுக்கக் கூடிய நெகிழ்வுத் தன்மை கொண்டது. மிகுந்த இறுக்கமாக இல்லாது, எதையும் ஏற்றுக் கொண்டு எல்லோரையும் ஒரே தராசில் எடைப் போடக்கூடிய ஒரு ஒப்பற்ற ஆய்வு நடத்தப்பட்டு பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது தான் நம் அரசியல் சாசனச் சட்டம்.

இப்பொழுது மிகப்பெரிய அச்சுறுத்தல் என்பது நம் அரசியல் சாசனச் சட்டத்தின் மீதுதான் ஏற்பட்டுள்ளது. அரசியல் சாசனச் சட்டம் கொடுத்த மிகப்பெரிய நன்கொடை சனநாயகம். சனநாயகம் தேர்ந்தெடுக்கின்ற ஒரு பாசிசம் -மிகப்பெரிய பாசிச வழிமுறைகளும், அணுகுமுறைகளும், பாசிச சித்தாந்தங்களும் சனநாயகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவது ஒரு மிகப்பெரிய ஆபத்தான காலக்கட்டம் இது. டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள், “இந்த அரசியல் சாசனச் சட்டம் சட்டத்தால் அல்ல; அந்த அரசியல் சாசனச் சட்டம் யாருடைய கையில் உள்ளது என்பதைப் பொறுத்துத் தான் அதன் வெற்றியும் தோல்வியும்” என்று சொல்லுவார்.

ஆகவே வளரக்கூடிய இளம் தலைமுறையினரிடம் இந்த அரசியல் சாசனச் சட்டத்தை பத்திரமாக ஒப்படைக்க வேண்டும். அவர்களுக்கு இது குறித்த சரியான புரிதலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் இந்திய அரசியல்

சாசனச் சட்டம் உருவாக்கி தருகின்ற சமூகத்தின் முப்பரிமாணம் என்று சொல்கிறோம். ஆனால் ஒரு சமத்துவமான சமூகத்தை நோக்கி இதன் பயணம் இருக்கிறதா என்றால் இல்லை. 50 ஆண்டுகளுக்கு முன்னால் தீண்டாமைச் சுவர் எவ்வாறு வகுப்பறைக்குள் இருந்ததோ, அதைப் போல இன்று தொழில் நுட்பச் சுவர் இன்று நம் வகுப்பறைக்குள் உள்ளது. படிக்கின்ற மாணவர்களுக்கு மத்தியிலே இரண்டு பகுதிகளாக இருக்கிறார்கள். ஒருவர் கையிலே எல்லா வசதிகளையும் பெற்ற ஒரு ஸ்மார்ட்போன், அவர் இல்லத்தில் மிகப்பெரிய wifi வசதி, இன்னொரு புறம் இம்மாதிரியான கருவிகளை வாங்கக்கூடிய வசதியோ, அதை புரிந்து கொள்ளகூடிய அறிவோ, அதைச் சொல்லித்தரக்கூடிய பெற்றோர்களோ இல்லாத ஒரு கூட்டம். ஒரு சமத்துவமற்ற சமூகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அதைப் போல் வாய்ப்புகளும் சமமானதாக இல்லை.

அதிகாரமும் ஆட்சியும் யாருடைய கையில் இருக்கிறது என்று பார்த்தால்,சில குறிப்பிட்ட நபர்களின் கையில்தான் இருக்கின்றது. அதிகாரப் பரவலாக்கம் செய்ய - அரசியல் சாசனச் சட்டம் சொல்கின்ற வழிமுறைகளின்படி இவற்றை எல்லாம் பெறுவது என்று வரும் தலைமுறையினருக்கு சொல்லி தரக்கூடிய மிகப்பெரிய பாடம். அந்தப் பாடத்தை சொல்லித் தருகின்ற முதல் படியாகத்தான் வான்முகில் முன்னெடுத்திருக்கும் இத்திட்டத்தைப் பார்க்கிறேன். இது நாம் எதிர்காலத்திற்கு செய்கின்ற மிகப்பெரிய முதலீடு. வான்முகில் அமைப்பைச் சார்ந்தவர்கள் அரசியல் சாசனச் சட்டத்தை நம் கிராமத்தில் இருக்கின்ற குழந்தைகளுக்கு, பல்வேறு சமூகப் பின்புலத்தில் இருந்து வருகின்றவர்களுக்கு, அவர்கள் சார்ந்து இருக்கின்ற மதங்கள், சார்ந்து இருக்கின்ற சமூகங்கள், சார்ந்து இருக்கின்ற பூகோளப் பகுதிகள், இப்படிப்பட்ட பின்புலங்களில் இருக்கின்ற மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற பணி நாம் இதுவரையில் செய்திராத - இப்போது செய்யப்படும் மிகப் பெரிய முதலீடு. மிக அருமையான இந்தத் திட்டத்தை எவ்வளவு தூரம் வெற்றிகரமாக ஆக்கப்போகிறோம் என்று திட்டமிட வேண்டும். இதற்கு அர்ப்பணித்து கொண்டிருக்கின்ற தன்னார்வத் தொண்டர்களுக்கும், அவர்களை ஒருங்கிணைக்கும் தலைவர்களுக்கும் என் மன்மார்ந்த வாழ்த்துக்கள்!

எ

# தமிழக அளவிலான தொடக்க விழாவில் முனைவர் வே. வசந்தி தேவி அவர்களின் சிறப்புரை

21.08.2021 அன்று மாலை இணைய வழியில் நடைபெற்ற குழந்தைகளுக்கான
அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் தொடக்க விழாவில்
திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக
மேனாள் துணை வேந்தர் **முனைவர் வே. வசந்திதேவி** அவர்கள் ஆற்றிய உரை

வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ள அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்திற்கான முயற்சி என்பது சாதாரண முயற்சி அல்ல. இது பெருமளவிற்கு விரிவடைந்து, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய, நமது சமுதாயத்தில் அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்தக் கூடிய ஒரு பெரு முயற்சி! சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பிறகு தொடங்குகின்ற ஒரு புதிய முயற்சியாக இருக்கலாம். இது அரசின் முயற்சியாக மாறவேண்டும் என வலியுறுத்துகிறேன். 11 வயது முதல் 15 வயது வரை இருக்கின்ற குழந்தைகளுக்கு இளம் பருவத்திலேயே பல்வேறு வழிகளிலே, உண்மையை புரிந்து கொண்டு, உலகத்துடன் ஒன்றாகக் கூடிய அந்த வயதிலே அவர்களுக்கு அரசமைப்புக் கல்வியை கொண்டு செல்கின்றோம்.

வாண்டுகள் பயணம் என்ற பாடநூல் உண்மையான கல்வியைக் குழந்தைகளுக்குக் கொண்டு செல்கிறது. இன்று நமக்கு எவை மறுக்கப்பட்டிருக்கின்றதோ, நம்முடைய வகுப்பறைகளில் எவையெல்லாம் மறைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தக் கல்வியை நாம் இன்றைக்கு இந்த அரசமைப்பு உரிமைக் கல்வி மூலம் வெளியிலே கொண்டு வருகிறோம்; அந்தக் கல்வியை வீதிகளிலே கொண்டு வந்திருக்கின்றோம். சமுதாயங்களுக்கு கொண்டு செல்கின்றோம்.

அனைவரும் ஒன்றாக இணைந்து தொலைத்துவிட்ட அரசியல் சாசன விழுமியங்களை மீட்டெடுப்பதற்கான மிகப் பெரிய ஒரு முயற்சியைத் தான் வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

வகுப்பறைக் கல்வி எவ்வாறு இன்றைக்கு உண்மைக்கு திரைபோட்டு மறைக்கின்ற கல்வியாக மாறிவிட்டது என்பது நமக்குத் தெரியும். வகுப்பறைக் கல்வி என்பது பல்வேறு வகைகளிலே பெரும் குறைபட்ட ஒரு கல்வி. குழந்தைகளை கொடூரமான ஒரு உலகத்திற்கு கொண்டு செல்கின்ற கல்வியாகவே மாறிவிட்டது. ஏனென்றால் தங்களைப் பற்றி குழந்தைகள் புரிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய உலகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள இயலாத, அவர்களுடைய உலகத்தை மாற்றி புதிய உலகமாக - புத்தொளி பெறுகின்ற ஓர் உலகமாக மாற்றுவதற்கு பலனற்ற கல்வியாக இன்றைய வகுப்பறைக் கல்வி இருக்கிறது. அந்தக் கல்வியை வகுப்பறைகளில் இருந்து இன்று மீட்டெடுக்கும் ஒரு அருமையான முயற்சிதான் இது.

தாங்கள் வாழும் பகுதிகளிலேயே, தங்களுடைய வசிப்பிடங்களிலேயே இந்தக் குழந்தைகள் அரசமைப்பு உரிமைக் கல்வியைக் கற்கப் போகிறார்கள்! அதுவும் எப்பேற்ப்பட்ட குழந்தைகள் இக்கல்வியைக் கற்கப் போகிறார்கள் என்றால், இந்த இயக்கத்திலே - இந்தப் பெரு முயற்சியிலே - இந்தத் திட்டத்திலே இணைந்துள்ள குழந்தைகள், பழங்குடியின, அருந்ததியினக் குழந்தைகள், மீனவக் குழந்தைகள், சிறுபான்மையினக் குழந்தைகள் பல்வேறு வகைகளில் உரிமைகளை எல்லாம் இழந்த குழந்தைகள், அந்தக் குழந்தைகள் தான் தாங்கள் வசிக்கும் இடங்களிலேயே இந்த உரிமைப் பாடத்தை கற்கப் போகிறார்கள். தங்களுடைய இயற்கையான சூழலிலே இக்கல்வியைக் கற்கப் போகிறார்கள். கல்வி என்பது குழந்தைகளும், இளைஞர்களும் தங்களைப் பற்றிப் புரிந்து கொள்வதாகும். தங்கள் சமுதாயத்தைப் பற்றி புரிந்து கொள்வதும் தாங்கள் வசிக்கும் சூழலின் பிரச்சனைகளைப் பற்றி புரிந்து கொள்வதுமாகும். அப்பிரச்சனைகளுக்கு தங்களுடைய அனுபவங்களின் வாயிலாகவே தீர்வு காண்பதற்கு முனைகின்ற ஒரு சனநாயக சமூகம்தான் இன்றைய தேவை. அப்படிப்பட்ட சனநாயக சமுதாயம் இந்தியாவிலே உள்ளதா?

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு நமது அரசியல் சாசனத்தை அற்புதமாக வடிவமைத்துக் கொடுத்த மாமேதை

அம்பேத்கர் அவர்களுடைய கனவினில் பிறந்த அந்த சனநாயக இந்தியாவை நாம் பார்க்கின்றோமா? இந்த இந்தியாவிலே எல்லா வகைப்பட்ட உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. உண்மையான சனநாயக நாட்டை உருவாக்க - இழந்த சனநாயகத்தையும், சனநாயகத்தின் ஆன்மாவான மனித உரிமைகளையும் எப்படி மீட்டெடுப்பது என்பதற்கான கல்விதான் இது!

இந்தப் பாடநூலிலே - வாண்டுகளினுடைய பயணத்தில், குழந்தைகளுக்கு மிக அருமையான பல பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தங்கள் கிராமத்திலே பயணிக்கப் போகிறார்கள்; வீடு வீடாக பயணிக்க இருக்கிறார்கள்; தெருத் தெருவாக சுற்றுகிறார்கள். ஊரின் உண்மைகளை எல்லாம் கண்டறியப் போகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைத்த நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எந்த அளவிற்கு தங்களுடைய கிராமங்களிலே, வீடுகளிலே, தங்கள் தெருக்களிலே உருவாகிக் கொண்டு இருக்கின்றன; பிறந்து கொண்டு இருக்கின்றனவா அல்லது மறைந்து கொண்டு இருக்கின்றனவா? என்பதைப் பற்றிய ஆய்வுகளிலே குழந்தைகள் ஈடுபடப் போகிறார்கள். இந்தக் குழந்தைகளின் மூலமாக, அவர்களுடைய கண்கள் வழியே தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள், அவர்களின் கள்ளமற்ற கண்களின் ஊடாகத் தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள், அதில் இருந்து உருவாகின்ற உண்மைகள், அதில் இருந்து பிறக்கின்ற உண்மைகள், எவ்வளவு பெரிய சமூகப் பொருளாதார ஆய்வுகளாலும் அல்லது நிபுணத்துவம் கொண்டவர்களாலும் செய்யமுடியாது. பெரியவர்கள் கண்டுபிடிக்க முடியாத உண்மைகளை இக்குழந்தைகள் கண்டறிந்து நம் முன்னால் போட்டு உடைப்பார்கள். அதைத்தான் நாம் இங்கு எதிர்பார்க்கின்றோம். அதுதான் இக்கல்வி மூலம் நடக்கும். ஏனென்றால் குழந்தைகள் உண்மைகளைத் திரித்து சொல்பவர்கள் அல்லர்.

தங்களுடைய வாழ்க்கையை ஒவ்வொரு வீடாகச் சென்று ஒவ்வொன்றாக கேட்கப் போகிறார்கள். குழந்தைகள் எப்படிப் படிக்கிறார்கள்? எந்த வயது வரை படிக்கிறார்கள்? ஏன் பள்ளி

இடைநிறுத்தம் ஏற்படுகின்றது? ஏன் இந்தக் குழந்தையினால் எதுவுமே புரிந்து கொள்ள முடியவில்லை? 8ஆம் வகுப்பு முடித்தாலும் ஒன்றுமே வாசிக்க முடியவில்லையே? இந்த அவல நிலைக்கெல்லாம் காரணம் என்ன? தங்களுடைய கிராமங்களிலே வீடுகளில் இருக்கக்கூடிய பெண்களின் நிலை என்ன? அவர்களுக்கு என்ன உரிமைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன? அந்த பெண்களின் சுமைகள் என்ன? சாதியம் நமது கிராமங்களில் வேர்விட்டுப் பரவியுள்ளது. சாதியத்தின் கொடூரம் எப்படி எல்லாம் தங்களுடைய வாழ்க்கையில் ஆட்டிப் படைக்கின்றது? இதையெல்லாம் குழந்தைகள் நேரில் பார்த்து, புரிந்து கொண்டு, கிராமத்துச் சூழலிலே, கிராமத்தின் மையத்திலே உட்கார்ந்து கொண்டு, இவற்றைப் பற்றி எல்லாம் பேசப் போகிறார்கள்; விவாதிக்கப் போகிறார்கள்; இவற்றிற்கெல்லாம் என்ன தீர்வு என்பதைப் பற்றி அந்தக் குழந்தைகள் தங்களுக்குள் உரையாடல் நிகழ்த்தப் போகிறார்கள். அங்கு இருந்துதான் அந்த உண்மை பிறக்கும்.

அந்தக் கள்ளமில்லாத கண்கள்; அந்தக் கண்கள் வழியாக தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள். அந்த கண்கள் வழியாக தரிசிக்கப்படுகின்ற இந்திய உண்மை; தமிழ்நாட்டின் உண்மை. இது இன்றைக்கு உடைக்கப்படவேண்டும். அனைவரின் முன்னால் கொண்டு வந்து காண்பிக்கப்படவேண்டும். இங்கு இருந்துதான் தீர்வுகள் பிறக்கும்.

இன்று பள்ளிகளில் நடந்து கொண்டிருக்கின்ற கல்வி என்பது முழுக்க முழுக்க குழந்தைகளை அந்நியப்படுத்துகின்ற கல்வி; சமுதாயத்தில் இருந்து குழந்தைகளை வேருடன் பிடுங்கி எறிகின்ற கல்வி; தங்களுடைய உலகத்தை புரிந்து கொள்ள முடியாத ஒரு கல்வி; அந்நியப்படுத்துகின்ற இந்தக் கல்வியை மாற்றி, சமுதாயத்துடன் இந்தக் கல்வியை மாற்றி, குழந்தைகள் இணைகின்ற கல்வியாக மாற வேண்டும்.

இத்திட்டத்தில் இணையும் குழந்தைகள் ஆண்டாண்டு காலமாக – நூற்றாண்டு காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள்; வஞ்சிக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மலைவாழ் மக்களும், தலித் மக்களும், அருந்ததியினர் மக்களும், மீனவ மக்களும், சிறுபான்மையின மக்களும்

காலங்காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள். அவர்கள் இன்றைக்கு இங்கு களம் இறங்கப் போகிறார்கள். அவர்கள் கண்கள் வழியாக இந்த உலகத்தை புரிந்து கொள்ள தொடங்குவோம். இதுதான் உண்மையான கல்வி! இந்தப் புதிய உலகை படைக்கின்ற அரசமைப்பு உரிமைக் கல்வி அந்த கள்ளமில்லாத குழந்தைகளின் கண்கள் வழியாக உண்மையைப் புரிந்து கொள்வோம். இன்றைய சமுதாயத்தில் நிலவும் உண்மையின் கொடூரத்தையும் புரிந்து கொள்வோம். அந்த உண்மையின் அநீதிகளைப் புரிந்து கொள்வோம். அந்த உண்மைகள் மறைக்கின்ற - மறுக்கின்ற உரிமைகளைப் புரிந்து கொண்டு, அதை மீட்டெடுக்கும் பெரும் சக்தியாக இந்தக் கல்வி அமையும்!

இந்தக் குழந்தைகள் வீதிவீதியாகப் பயணப்பட்டு வாண்டுகள் பயணத்திலே தாங்களாகவே கண்டு பிடிக்கட்டும்! அவர்கள் மிகப் பெரிய விஞ்ஞானிகளாக தங்களுடைய உலகத்தை கண்டெடுக்கட்டும்! அவர்கள் அந்த உலகத்தை மீட்டெடுத்து, அந்த பிஞ்சுக் கரங்களின் வழியாக, நாம் அந்தச் சக்தியை பெறுவோம்! உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கும், உரிமைகளை இழந்து - அநீதிகளை அனுபவிக்கும் அனைவருக்குமே உரிமைகளைக் கொண்டு போய் சேர்க்கின்ற இப்பெருமுயற்சியை தொடருவோம். வான்முகில் தொடங்கும் இந்த மாபெரும் முயற்சிக்கு - விடுதலைக் கல்வி முயற்சிக்கு நாம் அனைவரும் துணை நிற்போம்! இதுதான் விடுதலை அளிக்கின்ற கல்வி; அந்த விடுதலைக்கான கல்வி உலகத்திலே இருக்கின்ற மிகச்சிறந்த கல்வியாளர்களான பவுலோ பிரையர் போன்றவர்கள் எல்லாம் கனவு கண்ட அந்தக் கல்வி அம்பேத்கர் உருவாக்கிக் கொடுத்துள்ள அந்த அரசியல் சாசனக் கல்வியைக் காப்பாற்றுவோம் என்று கூறி வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ள இந்த மகத்தான பணிக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ

# அரசமைப்பு உரிமைக்கல்வி மன்றங்கள் இயங்கும் மாவட்டங்கள்

## - தோழமை அமைப்புகள் மற்றும் இயக்குநர்கள் விபரம்

| வ.எண். | மாவட்டம் | அமைப்பு | இயக்குநர் |
|---|---|---|---|
| 1. | புதுச்சேரி, கடலூர் | ஹோப் நிறுவனம் | திரு. P. ஜோசப் விக்டர் ராஜ் |
| 2. | சென்னை, செங்கல்பட்டு | தோழமை | திரு. அ. தேவநேயன் |
| 3. | பெரம்பலூர் | இந்தோ அறக்கட்டளை | திரு.J.முகம்மது உசேன் பாபு |
| 4. | திண்டுக்கல் | சைல்டு வாய்ஸ் | திரு. S. அண்ணாத்துரை |
| 5. | இராமநாதபுரம் | தமிழ்நாடு கிராம புனரமைப்பு இயக்கம் | திரு. S. கருப்பசாமி |
| 6. | தூத்துக்குடி | தூண்டில் மாணவர் இயக்கம் | அருட்திரு. சகேஷ் சந்தியா |
| 7. | ஈரோடு | சுடர் அறக்கட்டளை | திரு. S.C. நடராஜன் |
| 8. | தருமபுரி | ரியல் பவுண்டேசன் | திரு. K.P. செந்தில்ராஜா |
| 9. | சேலம் | பவர் அறக்கட்டளை | திரு. C. இராமு |
| 10. | மதுரை | அலைகுடி மக்கள் சமூகப் பாதுகாப்பு சங்கம் | திரு. S. மோகன் |
| 11. | விருதுநகர், திருநெல்வேலி | வான்முகில் | திரு. ம. பிரிட்டோ |

அரசமைப்பு உரிமைகளைப்

பண்பாடாக வளர்த்தெடுப்போம்...

VAAN MUHIL

வான்முகில்

ஒருங்கிணைக்கும்

# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

**Constitutional Rights Education Programme (CRE)**

தமிழ்நாடு – புதுவையில்...

15 மாவட்டங்களில்...

125 கிராமங்களில்...

குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின்

# தொடக்க விழா

***ஆகஸ்ட் 21, 2021 – சனிக்கிழமை மாலை 5.30 மணி***

**இணைய வழியில்**

குழந்தைகள் மன்றங்களின்

பெயர்ப் பலகை, மன்ற விதிகள், இலச்சினை, கையேடு,

மின்ஒட்டிகள், உறுதிமொழி வெளியீடு

தொடர்புக்கு: 9442618117 – 9994368503





வான்முகில்
ஒருங்கிணைக்கும்
அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
Constitutional Rights Education Programme (CRE)
குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி
மன்றங்களின் தொடக்கவிழா
இணையவழியில்
ஆகஸ்ட் 21, 2021
சனிக்கிழமை
மாலை 5.30 மணி
குழந்தை
மன்றங்களின்
• பெயர்ப்பலகை
• விதிமுறைகள்
• இலச்சினை
• கையேடு
• மின்ஒட்டிகள்
• உறுதிமொழி
வெளியீடு
zoom
User ID: 823 8791 6200
Passcode: 901991
LIVE
vaanmuhil
VAAN MUHIL
empowering communities
வரவேற்புரை
திருமிகு கா. கணேசன்
மாநில ஒருங்கிணைப்பாளர் - CRE
அறிமுகவுரை
வழக்கறிஞர் எம்.ஏ. பிரிட்டோ
இயக்குநர், வான்முகில்
தலைமை
முனைவர் இ. தேவசகாயம்
பாடத்திட்டக்குழு தலைவர், அரசமைப்பு உரிமைக் கல்வி
திட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை
மாண்புமிகு திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு
பாடநூலை வெளியிட்டு சிறப்புரை
மாண்புமிகு திரு மனோ தங்கராஜ்
தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு
முனைவர் வே.வசந்திதேவி
முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி
முன்னாள் தலைவர், தமிழநாடு மாநில மகளிர் ஆணையம்
சிறப்புரை
திருமிகு காரின் ஸ்டோல்
Consul General, German Consulate General, Chennai
திருமிகு சா. பீட்டர் அல்போன்ஸ்
தலைவர், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம்
மாண்புமிகு திரு D.ஜெயச்சந்திரன்
உறுப்பினர், தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம்
திருமிகு வீ. ராமராஜ்
உறுப்பினர், தமிழ்நாடு மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்
பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ்
சட்டமன்ற உறுப்பினர்
வழக்கறிஞர் ஹென்றி திபேன்
செயல் இயக்குநர், மக்கள் கண்காணிப்பகம்
நன்றியுரை : திருமிகு க. பிரியா, ஒருங்கிணைப்பாளர் - CRE
94426-18117 99943-68503

# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
## Constitutional Rights Education Programme (CRE)

குழந்தைகளே!

அரசமைப்பு உயர்த்திப்பிடிக்கும்

மதிப்பீடுகளை

அறிந்து கொள்ள வேண்டாமா?

அரசமைப்பு உறுதி அளிக்கும்

உரிமைகளைத்

தெரிந்து கொள்ள வேண்டாமா?

வாருங்கள்

வாண்டுகள் உலகத்திற்கு...

## குழந்தைகளுக்கான கல்வி உரிமை மன்றங்களின் தொடக்க விழா

ஆகஸ்ட் 21, 2021 –
சனிக்கிழமை
மாலை 5.30 மணி
இணைய வழியில்

ஒருங்கிணைப்பு
வான்முகில்
திருநெல்வேலி



## அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
Constitutional Rights Education Programme (CRE)

# குழந்தைகளுக்கான கல்வி உரிமை மன்றங்களின் தொடக்க விழா

ஆகஸ்ட் 21, 2021 – சனிக்கிழமை மாலை 5.30 மணி
இணைய வழியில்

**அரசமைப்பு முகப்புரை**
**உயர்த்திப்பிடித்துள்ள விழுமியங்களை**
**குழந்தை மன்றங்களில் விவாதிப்போம்...**

**சமத்துவம்**
**சமூக நீதி**
**சகோதரத்துவம்**
**சமயச்சார்ப்பின்மை**
**சனநாயகம்**
**மனித மாண்பு**
**இன்னும் பல...**



ஒருங்கிணைப்பு
**வான்முகில்**
திருநெல்வேலி

வான்முகில்
ஒருங்கிணைக்கும்

VAAN MUHIL
empowering communities

## குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

# மாநில அளவிலான கலந்துரையாடல் கூட்டம்

<u>பங்கேற்போர்</u>

**TANCEAN & TNCRI**
**தலைவர்கள்**
(சபைத் தலைவர்கள், சபைத் தலைவிகள், மாநிலத் தலைவர்கள், மாநிலத் தலைவிகள், மறைமாவட்ட கல்விப் பணி செயலர்கள்)

அக்டோபர்
21
வியாழன்
மாலை 5 மணி

zoom
Meeting ID: 865 9657 3868
Passcode: 483618


## வான்முகில்

15, Kavitha Nagar, Maharaja Nagar Post, Tirunelveli – 627 011, Tamil Nadu
0462-2521771 94426 18117 vaanmuhil@gmail.com



VAAN MUHIL
அரசமைப்பு உரிமைகளைப்
பண்பாடாக வளர்த்தெடுப்போம்...
குழந்தைகளுக்கான
அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம்
Constitutional Rights Education Club for Children (CRE Club)
கிராமம் / வார்டு :
மன்ற எண்:
ஒன்றியம் / நகராட்சி :
ஊராட்சி :
மாவட்டம் :
மாநில ஒருங்கிணைப்பு
வான்முகில்
15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல்,
திருநெல்வேலி




வான்முகில்
அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
VAAN MUHIL
Constitutional Rights Education Programme (CRE)
அரசமைப்புச் சட்ட நாள்
We, the People of India ...
இந்திய குடிமக்களாகிய நாம்...
வலையரங்கம்
zoom
Meeting ID: 879 3223 5160
Passcode: 136607
9442618117 - 9994368503
26.11.2021
வெள்ளி
மாலை
5 மணி


வான்முகில்
அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
Constitutional Rights Education Programme (CRE)
VAAN MUHIL
மாநில
குழந்தைகளுக்கான
கொள்கை 2021
நாம் என்ன செய்ய வேண்டும்?
வலையரங்கம்
NOVEMBER
22
திங்கள்
மாலை 5.30 மணி
இணைய வழியில்
தலைமை
திரு.எம்.ஏ.பிரிட்டோ
இயக்குனர், வான்முகில்
கருத்துப் பகிர்வு
திரு.வித்யாசாகர்
குழந்தைப் பாதுகாப்பு நிபுணர்
திரு.தேவநேயன்
இயக்குநர், தோழமை
திருமிகு.செல்வகோமதி
இணை இயக்குநர், சோகோ
திரு.கா.கணேசன்
மாநில ஒருங்கிணைப்பாளர்,CRE
zoom Meeting ID: 834 7077 6508 - Passcode: 788881
9442618117 – 9994368503



# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

## Constitutional Rights Education Programme (CRE)

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களுக்கான

## கொரோனா பாதுகாப்பு நடத்தை முறைகள்

- கொரோனா பெருந்தொற்று, பொதுமுடக்கம் குறித்து குழந்தைகளிடம் உரையாடுதல்.
- பாதுகாப்பான இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளை சோப்பு போட்டுக் கழுவுதல், குறித்து குழந்தைகளுடன் விவாதித்தல்.
- கைகளைச் சுத்தம் செய்ய கிருமிநாசினியைக் களப்பணியாளர்கள் வைத்திருத்தல்.
- மன்றக் கூட்டங்களில் பங்கேற்கும் குழந்தைகள் முகக்கவசம் அணிவதை உறுதி செய்தல்.
- விளையாட்டுகளில் பங்கேற்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவாக இருத்தல் நல்லது. அனைத்துக் குழந்தைகளுக்கும் சமவாய்ப்பு அளித்தல்.
- குழந்தைகளில் யாரேனும் உடல்நலக் குறைவோடு இருந்தால், பெற்றோரை வரவழைத்து வீட்டிற்கு அனுப்புதல்.
- கொரோனா அறிகுறிகள் இருப்பின் மருத்துவ பரிசோதனை செய்வதை உறுதி செய்தல்.
- தடுப்பூசி போடுவதை ஊக்கப்படுத்துதல்.
- குழந்தைகளில் யாரேனும் மன அழுத்தத்தில் இருந்தால், அவர்களோடு உரையாடுதல்.

ஒருங்கிணைப்பு

**வான்முகில்**

15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி

VAAN MUHIL
empowering communities

தொடர்புக்கு
எம்.ஏ.பிரிட்டோ 9442618117
கா.கணேசன் 9994368503

வான்முகில்

அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

Constitutional Rights Education Programme (CRE)

VAAN MUHIL

empowering communities

# அரசமைப்புச் சட்ட நாள்

*We, the People of India ...*

## இந்திய குடிமக்களாகிய நாம்...

## வலையரங்கம்

**கருத்துரை**

வழக்கறிஞர் **ஹென்றி திபேன்**, மக்கள் கண்காணிப்பகம்

வழக்கறிஞர் **அஜிதா**, சென்னை உயர்நீதிமன்றம்

வழக்கறிஞர் **எம்.ஏ.பிரிட்டோ**, இயக்குனர், வான்முகில்

**அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் எதை நோக்கி...**

முனைவர். **லெ.பெர்னாட்**
ஆலோசகர், CRE

திரு. **ப.இராஜன்**,
PME ஆலோசகர், CRE

திரு. **நடராஜன்**
இயக்குனர், சுடர் நிறுவனம்

திருமிகு. **க.பிரியா**,
மாநில துணை ஒருங்கிணைப்பாளர், CRE

zoom

Meeting ID: 879 3223 5160
Passcode: 136607

**26.11.2021**
வெள்ளி
மாலை
5 மணி

9442618117 – 9994368503


வான்முகில்
அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
Constitutional Rights Education Programme (CRE)
பெண்கள் மீதான வன்முறை குறித்து
புகார்களை பதிவு செய்ய...
சட்டரீதியான இலவச உதவி எண்
பெண்கள் உதவி எண்
181


வான்முகில்
அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
Constitutional Rights Education Programme (CRE)
குழந்தைகள் மீதான வன்முறை குறித்த
புகார்களை பதிவு செய்ய...
சட்டரீதியான இலவச உதவி எண்
குழந்தைகள்
உதவி எண்
1098


10.12.2021
அனைத்துலக
மனித உரிமைகள் தினக்
கொண்டாட்டம்
குழந்தைகளின்
ஓவியத் திருவிழா
"என் உரிமை... என் உலகம்..."
தமிழகம் – புதுவையில்
அனைத்து அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களிலும்...
வான்முகில்
அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்
Constitutional Rights Education Programme (CRE)
9442618117 – 9994368503
CRE
VAAN MUHIL
empowering communities

## மன்ற நிகழ்வுகளின் நிழற்படங்கள்




17.11.2021 மன்றக் குழந்தைகள் உருவாக்கிய CRE வடிவிலான கார்த்திகை தீப ஒளி



மன்றக் குழந்தைகளின் உரையாடலும் அரசமைப்பு முகப்புரை வாசிப்பும்

- இந்தோ அறக்கட்டளை, பெரம்பலூர் மாவட்டம்



மதுரை மாவட்ட மன்றத் தொடக்க விழா நிகழ்வில் குத்துவிளக்கு ஏற்றி மன்றத்தைத் தொடங்கி வைக்கும் குழந்தை
- IPRO அமைப்பு, மதுரை மாவட்டம்



சத்தியமங்கலம் ஒன்றிய மன்றத் தொடக்க விழா
- சுடர் அமைப்பு, ஈரோடு மாவட்டம்



சிவகாமிபுரம் மன்றத் தொடக்க விழா நிகழ்வு
- TRRM அமைப்பு, இராமநாதபுரம் மாவட்டம்



தொம்பக்குளம் மன்றத் தொடக்க விழா நிகழ்வில் குத்துவிளக்கு ஏற்றி மன்றத்தைத் தொடங்கி வைக்கும் குழந்தை
- வான்முகில் அமைப்பு, விருதுநகர் மாவட்டம்



மன்றத் தொடக்க விழா நிகழ்வில் அரசமைப்பு முகப்புரை
பதாகையை வெளியிடும் குழந்தைகள்
- தோழமை அமைப்பு, சென்னை



மாவட்டத் தொடக்க விழா நிகழ்வில் குத்துவிளக்கு ஏற்றி
தொடங்கி வைக்கும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்
- சுடர் அமைப்பு, ஈரோடு மாவட்டம்



மாவட்டத் தொடக்க விழா நிகழ்வில் பங்கேற்கும்
குழந்தைகளும் சான்றோர்களும்
- தூண்டில் மாணவர் இயக்கம், தூத்துக்குடி மாவட்டம்



மன்றத் தொடக்க விழா நிகழ்வில் பங்கேற்கும் குழந்தைகள்
மற்றும் மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவினர்
- வான்முகில், திருநெல்வேலி மாவட்டம்




மாவட்டத் தொடக்க விழா நிகழ்வில் பங்கேற்று தகவல்
பலகையை திறந்து வைக்கும் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர்
மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்கள்
- ரியல் பவுண்டேசன், தருமபுரி மாவட்டம்



கூடப்பாக்கம் மன்றத் தொடக்க விழா நிகழ்வில் பங்கேற்கும்
குழந்தைகளும் குழந்தை உரிமை செயற்பாட்டாளர்களும்
- ஹோப் நிறுவனம், புதுச்சேரி



நூத்துலாபுரம் மன்றத் தொடக்க விழாவில் ஆர்வத்துடன
பங்கேற்கும் குழந்தைகள்
- சைல்டு வாய்ஸ் அமைப்பு, திண்டுக்கல் மாவட்டம்



மன்றத் தொடக்க விழா நிகழ்வில் பங்கேற்கும் குழந்தைகள்
மற்றும் சான்றோர்கள்
- TRRM அமைப்பு, இராமநாதபுரம் மாவட்டம்



சீலம்பட்டி மன்றத் தொடக்க விழாவில் உறுதிமொழி
ஏற்கும் குழந்தைகள்
- பவர் அறக்கட்டளை, சேலம் மாவட்டம்




மாவட்டத் தொடக்க விழா நிகழ்வில் பங்கேற்கும் கல்வியாளர்கள்,
குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்கள்
- தருமபுரி மாவட்டம்




திருச்சியில் மாவட்டத்தில் செப்டம்பர் 21 - 23 நாட்களில் நடைபெற்ற அரசமைப்பு உரிமைக் கல்வி திட்ட நெறியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சியில் பங்கேற்ற நெறியாளர்கள், இயக்குநர்கள், மையக்குழு உறுப்பினர்கள்

# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

## Constitutional Rights Education Programme (CRE)

## குழந்தை பாதுகாப்புக் கொள்கை

**தமிழ்நாடு-புதுவையில்....**

17 மாவட்டங்களில்... 125 கிராமங்களில்...

**குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களுக்கான கொள்கை**

- 18 வயதுக்குட்பட்ட அனைவரும் குழந்தைகளே!
- அனைத்து குழந்தைகளுக்கும் வாழ்வுக்கான, வளர்ச்சிக்கான, பாதுகாப்பிற்கான மற்றும் பங்கேற்பிற்கான உரிமைகள் உள்ளன.
- மன்றத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் "குழந்தைகளின் சிறந்த நலனே" மையமாக இருக்கும். எப்போதும் "குழந்தைகளுக்கே முதலிடம்" என்பதை உறுதி செய்வேன்.
- அனைத்துக் குழந்தைகளையும் சமமாக நடத்துவேன்; சாதி, சமயம், இனம், பாலினம், பிறப்பிடம், நிறம், உடை போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டமாட்டேன்.
- இதுவரை குழந்தைகளுக்கு "உடல், மன, பாலியல் ரீதியாக" நான் எந்தத் தீங்கும் இழைத்ததில்லை. இனியும் இழைக்கமாட்டேன்.
- மன்ற நிகழ்வுகளில் எடுக்கப்படும் ஒளிப்படங்களை, காணொளிகளை உரிய இசைவின்றி எவரிடமும் பகிர்ந்து கொள்ளமாட்டேன்.
- எம் கவனத்திற்கு வரும், குழந்தைகள் மீதான வன்முறைச் சம்பவங்களை எமது அமைப்பிடமும், அவர்கள் ஆலோசனைப்படி, குழந்தை உதவி எண் 1098, குழந்தை நலக் குழுமம், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகு, சிறப்பு சிறார் காவல் அலகு ஆகிய அமைப்புகளுக்கும் தெரிவிப்பேன்.

# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

## Constitutional Rights Education Programme (CRE)

### இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை
### Preamble to the Constitution of India

**இந்திய குடிமக்களாகிய நாம்**

இந்தியாவை இறையாண்மை கொண்ட
சமதர்ம, சமய சார்பற்ற, சனநாயக,
குடியரசாக அமைப்பதென உறுதி பூண்டுள்ளோம்.

**இதன் மூலம் அனைத்து குடிமக்களையும் பாதுகாப்பதுடன்**

- சமூக, பொருளாதார, அரசியலில் அனைவர்க்கும் நீதி
- எண்ணியதை வெளிப்படுத்த, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச் சொல்ல, வழிபாடு செய்ய சுதந்திரம்
- தகுநிலையிலும், வாய்ப்பிலும் சமத்துவம் அளித்து உயர்வுறச் செய்தல்
- தனி மனிதர்களின் மாண்பு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவத்தோடு வாழ்தல்.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தை**
**1949ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள்**
**நமது அரசியல் நிர்ணய அவையில் ஏற்றுக்கொண்டு,**
**இயற்றி, நமக்கு நாமே வழங்குகிறோம்.**


**வான்முகில்**
திருநெல்வேலி

**வான்முகில்**
15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி
எம்.ஏ.பிட்டோ 94426 18117, கா.கணேசன் 99943 68503